AUGUST 13, 2020
THURSDAY
VOL: 006/072
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

ஜனவரியை குழப்பிய ரணில்

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தலைமைத்துவம் தொடர்பில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளது. புதிய தலைமைத்துவம் தேவையென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் ஆராய்வதற்காக, ஜனவரி வரையிலும் தானே, கட்சியின் தலைவராக இருப்பேன்.

தொடர்ச்சி P2

கண்டியிலிருந்து மைத்திரி வெறுங்கையுடன் திரும்பினார்

புதிய அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்று, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்படக்கூடுமென பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எவ்விதமான அமைச்சுப் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

3 பெண்கள் இடம்பிடிப்பு

புதிய அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக பவித்ரா தேவி வன்னியாரச்சி நியமிக்கப்பட்டுள்ளார். சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சராகவும், திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொலவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பிள்ளையானுக்கு மட்டக்களப்பு?

டக்ளஸ், அங்கஜன், திலீபன், மஸ்தானுக்கு வாய்ப்பு

நிர்வாக மாவட்டங்கள் 25 உம் தேர்தல் மாவட்டங்கள் 22உம் இருக்கின்ற நிலையில், இணைப்புக்குழுத் தலைவர்கள், 24 மாவட்டங்களுக்கு மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எவரும் நேற்று (12) நியமிக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

பழைய முகங்கள் பல இல்லை; புதியோரை இணைத்து அமைச்சரவை

25 க்குள் அடங்கியது

39 பேருக்கு இராஜாங்கம்

23 பேர் மாவட்ட தலைவர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, 25க்குள் மட்டுப்படுத்தப்பட்டது. இராஜாங்க அமைச்சர்களாக 39 பேர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். அவர்களுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர்களாக 23 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

'சஜித்தின் முடிவுக்கு இணங்குவோம்'

பா. நிரோஸ், (படம்பிடிப்பு - நிமல்சிறி)

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ள தேசியபட்டியல் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸவுக்கே உண்டு எனத் தெரிவித்த அந்தக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தேசிய பட்டியல் விவகாரத்தில் சஜித் எடுக்கும் முடிவுக்கு இணங்குவோம் என்றார்.

தொடர்ச்சி P2

உ/த பரீட்சை நேர சூசி

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

சிறுபான்மையினர் நால்வருக்கு இடம்

புதிய அமைச்சரவை நியமனத்தில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நால்வர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அதில், டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

அதாவுல்லாஹ் 'அவுட்'

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு முழுமையாக ஆதரவளிப்பதாக, அறிவித்திருந்த தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்க்கு, புதிய அரசாங்கத்தில் எவ்விதமான பொறுப்புகளும் வழங்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

திசைகாட்டி நியமித்தது

"திசைகாட்டி" சின்னத்தில் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியபட்டியல் நியமனத்துக்கு, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக

தொடர்ச்சி P2

அமைச்சரவைக்குள் 'நான்கு முகங்கள்'

புதுமுகங்கள் மூன்று

புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் ராஜபக்ஷர்கள் நால்வர் இடம்பிடித்துள்ளனர். இதேவேளை, புதிதாக மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

தாமரை மொட்டில் மலராத கைகள்

தாமரை மொட்டைச் சின்னமாகக் கொண்ட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில், கையை சின்னமாகக் கொண்ட,

தொடர்ச்சி P2

Covid-19 தொற்று நோய் நிலவிய போதிலும், 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் SLT குழுமத்தின் செயற்படு இலாபம் 55% ஆல் அதிகரிப்பு

குழுமத் தலைவர்
ஸ்ரீலங்கா ரெலிகொம்

குழும பிரதம நிறைவேற்று அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

பிரதம நிறைவேற்று அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

பிரதம செயற்பாட்டு அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) குழும நிறுவனம், 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான அதன் நிதித் தகவல்களை வெளியிட்டுள்ளது. நாட்டில் Covid-19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், அதன் செயல்பாட்டு இலாபம் ரூபா 6.9 பில்லியன் அதாவது 55% வளர்ச்சியை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில், குழுமத்தின் வருமானம் ரூபா 44.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது, வருடாந்த அடிப்படையில் 3.6% மிதமான வளர்ச்சியைக் காட்டுகிறது. இதற்கு பிரதான காரணம், SLT மற்றும் அதன் இணை நிறுவனமான மொபிடெல் பிறைவேட் லிமிட்டெட் என்பன இணைந்து, தொற்று நோய்க் காலப்பகுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு உதவி புரியும் முகமாக, பல்வேறு இலவச பெக்கேஜ்கள், இலவச தரவுகள் போன்றவற்றை வழங்கியமையாகும். மேலும், முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய வருமானம், தொற்று நோய்க் காலப்பகுதியினால் பின்னடைந்ததும் மொத்த வருமானத்தைப் பாதிக்கக் காரணமாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், புரோட்பாண்ட் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, IPTV மற்றும் Career Business services ஆகிய பிரிவுகளில் தனி நபர் வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக வாடிக்கையாளர்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் வளர்ச்சி காணப்பட்டது.

மேலதிக தகவல்களுக்கு 7ஆம் பக்கத்தைப் பார்க்கவும்

PAGE 1 தொடர்ச்சிகள்

ஜனவரியை குழப்பிய ரணில்

அதுவரையிலும் விலகமாட்டேன் என ரணில் அறிவித்துள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியபட்டியல் பதவி, மக்கள் வங்கியின் முன்னாள் தலைவர் நிஷங்க நாணயக்காரவுக்கு வழங்கப்பட்டுவிட்டதெனச் செய்திகள் வெளிவந்தன. எனினும், தேசிய பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்லுமாறு ரணில் விக்கிரமசிங்கவைப் பலரும் வலியுறுத்துவதாகவும் அறியமுடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்துக்குச் சென்றுவிட்டால், கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து நீக்குவது கடினமென மற்றுமொரு தரப்புக் கூறிவருகின்றது. இந்நிலையில், ஜனவரி வரையிலும் தலைவர் பதவியில் இருப்பதாகத் தெரிவித்திருக்கும் ரணில், 2021 ஜனவரி வரையிலுமா அல்லது 2023 ஜனவரி வரையிலுமா இன்றேல், 2030 ஜனவரி வரையிலுமா என்பது தொடர்பில் தெட்டத்தெளிவாகக் கூறவில்லையென சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே தீர்மானித்திருந்தாலும் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் ஆலோசனைகளுக்கு இணங்க, முன்னைய தீர்மானத்தை அவர், மாற்றிக்கொண்டுள்ளார் என்றும் அதனால்தான், "ஜனவரி" கதையை அவிழ்த்து விட்டுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

25 க்குள் அடங்கியது

புதிய அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வளாகத்திலுள்ள (மகுல் மடுவ) விருந்தினர் மண்டபத்தில், மிகவும் எளிமையான முறையில் நேற்று(12) நடைபெற்றது.

புதிய அமைச்சரவைக்குள்ளும் புதியவர்கள் மூவர் இணைக்கப்பட்டுள்ளனர். இராஜாங்க அமைச்சர்களாகப் புதியவர்கள் சிலர் நியமிக்கப்பட்டனர். இதேவேளை, கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகித்த பலருக்கு இம்முறை வாய்ப்பளிக்கவில்லை.

அமைச்சர்களான, தினேஷ் குணவர்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனக்க பண்டார தென்னகோன், பவித்ரா வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் பத்திரண, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, விமல் வீரவன்ச, பிரசன்ன ரத்ன உள்ளிட்டோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தலில் புதிதாகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய புதியவர்கள் பலருக்கும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

> **இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில், ஊடகத்துறை அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு, ஊடகத்துறை அமைச்சு வழங்கப்பட்டுள்ளது**

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில், ஊடகத்துறை அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு, ஊடகத்துறை அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. அவர், தனது கடமைகளை இன்று (13) பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த அரசாங்கங்களில் அமைச்சர்களாகப் பதவிவகித்த தயாசிறி ஜயசேகர, லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க, பிரியங்கர ஜயரத்னமுங்க ஆகியோருக்கு, அவர்கள் ஏற்கெனவே வகித்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு ஏற்ப தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடைமுறைச் சாத்தியமானதும் யதார்த்தமானதுமாக அமைச்சரவையின் எண்ணிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. அமைச்சு கட்டமைப்பை அமைப்பதில் தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதென, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து மைத்திரி வெறுங்கையுடன் திரும்பினார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வளாகத்திலுள்ள (மகுல் மடுவ) விருந்தினர் மண்டபத்தில் வைத்து, புதிய அமைச்சரவைக்கான நியமனங்கள் நேற்றுக்காலை வழங்கப்பட்டன.

அங்கு, முன்வரிசையிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமர்ந்திருந்தார். எனினும், எவ்விதமான அமைச்சுப் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்படவில்லை. கடந்த கால அரசாங்கங்களில் பல அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவிருந்த அவருக்கு, முக்கியமான அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்படக் கூடுமெனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பொலன்னறுவை மாவட்டத்தில் இம்முறை போட்டியிட்டு 111,137 விருப்பு வாக்குகளைப் பெற்று, மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

3 பெண்கள் இடம்பிடிப்பு

இதனடிப்படையில், அமைச்சரவைக்குள் பெண்ணொருவரும் இராஜாங்க அமைச்சர்களாக இரண்டு பெண்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பிள்ளையானுக்கு மட்டக்களப்பு?

வடக்கில் ஐந்து மாவட்டங்களுக்கும் சிறுபான்மையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அங்கஜன் இராமநாதனும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு டக்ளஸ் தேவாநந்தாவும் கே. திலீபன், வவுனியா மாவட்டத்துக்கும், மன்னார், முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் காதர் மஸ்தானும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

> **அந்த மாவட்டத்துக்கு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்ற, சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்படுவார்**

கிழக்கில், அம்பாறை மாவட்டத்துக்கு டி. வீரசிங்கவும், திருகோணமலை மாவட்டத்துக்கு கபில அத்துகோரளவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எவருமே நியமிக்கப்படவில்லை.

அந்த மாவட்டத்துக்கு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்ற, பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்படுவார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், சந்தேகநபராகக் கைது செய்யப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) பிணை வழங்கப்படாமல் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஆகையால், அவரை நேற்றைய வைபவத்துக்கு அழைக்க முடியாத நிலை மையொன்று ஏற்பட்டதெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிவநேசதுரை சந்திரகாந்தன் முகங்கொடுத்திருக்கும் சட்டரீதியான சிக்கலுக்குத் தீர்வு கண்டதன் பின்னர், மட்டக்களப்பு மாவட்ட இணைப்புக்குழுத் தலைவராக அவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபான்மையினர் நால்வருக்கு இடம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியபட்டியலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சதாசிவம் வியாழேந்திரன், தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமான், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஏனைய அனைவரும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

அமைச்சரவைக்குள் 'நான்கு முகங்கள்'

ஏனைய அனைவரும் ஏற்கெனவே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்களாவர்,

அமைச்சரவைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்குவார். அதில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நீர்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இதேவேளை, உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் இராஜாங்க அமைச்சராக சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைச்சரவையில், நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலி சப்ரி, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வலுசக்தி அமைச்சர் உதய பிரபாத் கம்மன்பில ஆகிய மூவரும் புதியவர்கள் ஆவர்.

'சஜித்தின் முடிவுக்கு இணங்குவோம்'

தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தேசிய பட்டியல் விவகாரத்தில் சஜித் எடுக்கும் முடிவுக்கு இணங்குவோம் என்றார்.

கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியை நாமே உருவாக்கினோம். அந்தக் கூட்டணியோடு நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. அதனால் சில விடயங்களை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. தேசியபட்டியல் விவகாரத்தால் எமது பிரதான நோக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

எமக்குத் தேசியபட்டியல் ஒன்று வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாட்டுக்காகவும் ஐக்கிய மக்கள் சக்தியோடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதாலும் அது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகாரத்தை, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசியபட்டியல் ஆசனங்கள் ஏழு மட்டுமே ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்திருக்கிறது. தேசியபட்டியல் ஆசனங்களில் 10 ஆசனங்கள் கிடைக்குமென நாம் எதிர்பார்த்தோம். தேசியபட்டியல் விவகாரத்தை வைத்துக்கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி என்கிற கூட்டணியை உடைக்க விரும்பவில்லை. எனவே, சஜித் பிரேமதாஸ இது தொடர்பில் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் தாம் இணங்குவதாகவும் அவர் இதன்போது கூறினார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ஏனைய கட்சிகள் பெற்றுக்கொண்ட ஆசனங்கள், கடந்த முறை பெற்றுக்கொண்டதைவிடக் குறைவானது. ஆனால், 8ஆவது நாடாளுமன்றத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பெற்றுக்கொண்ட 6 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் 9ஆவது நாடாளுமன்றத்திலும் தக்கவைத்துக்கொண்டுள்ளது எனவும் கூறினார்.

இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்கள் அதிகளவான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, கணிசமான சாதனைகளையும் தாம் படைத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சி இப்போது இல்லை. ஐக்கிய தேசிய கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவார்களெனவும் கூறிய அவர், ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிட்ட கூட்டணியினருக்குத் தமிழர்கள் அல்லாத முஸ்லிம், சிங்களவர்களும் வாக்களித்திருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பிரதான கூட்டணி தமிழ் முற்போக்குக் கூட்டணியே எனவும் கூறிய அவர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெறும் இரண்டு எம்.பிகளையே பொதுத்தேர்தலில் பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு 6 எம்.பிகள் கிடைத்துள்ளனர் எனவும் கூறினார்.

உ/த பரீட்சை நேர சூசி

ஒக்டோபர் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள், நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன அதற்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

உயர்தர புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு அமைவாகவே நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தில் பரீட்சைக்கான அட்டவணைகளைப் பார்வையிட முடியும்.

அதாவுல்லாஹ் 'அவுட்'

முன்னாள் அமைச்சரான அவருக்கு, புதிய அரசாங்கத்தில் முக்கியப் பொறுப்புகள் வழங்கப்படுமெனப் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சோ, இராஜாங்க அமைச்சுக்கான பொறுப்புகளோ வழக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை தேர்தலில், தேசிய காங்கிரஸின் கீழ், திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 35,697 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திசைகாட்டி நியமித்தது

விஞ்ஞான கல்விப்பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர், கலாநிதி ஹரினி அமரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையில் முதலாவதாக

அரசமைப்பு, பாதீடு ஆகியன ஆராயப்படும்

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தல், நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் (பாதீடு) குறித்து ஆராயப்படக்கூடுமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் வாராந்த அமைச்சரவை, ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் கூடும். எனினும், புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம், ஓகஸ்ட் 20ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆகையால், ஓகஸ்ட் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக, புதிய அமைச்சரவை கூடுமென அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றுவதற்கு மக்களால் ஒரு பெரிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாக வைத்தே, அரசமைப்பில் திருத்தங்களை முன்னெடுபதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகிறதெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாமரை மொட்டில் மலராத கைகள்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர், நேற்றைய அமைச்சரவை நியமனத்துக்குள் உள்வாங்கப்படவில்லை.

அத்துடன், கடந்த பல அரசாங்கங்களில் அமைச்சரவை அந்தஸ்துள்ள முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களும் இம்முறை ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்விதமான பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய, எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்டோருக்கு எவ்விதமான பதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன், அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, விஜயதாஸ ராஜபக்ஷ, சந்திமவீரக்கொடி, டிலான் பெரேரா ஆகியோருக்கும் எவ்விதமான அமைச்சுப் பதவிகளோ, இராஜாங்க அமைச்சின் பொறுப்புகளோ வழங்கப்படவில்லை. மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர்கள் நியமனத்தில், நுவரெலியா மாவட்ட இணைப்புக்குழுத் தலைவராக எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர் பதவிக்கும் உள்வாங்கப்படவில்லை.

மாலக்க சில்வாவுக்கு நிபந்தனைப் பிணை

வர்த்தகர் ஒருவரிடம், 1 இலட்சம் ரூபாய் கோரி, உயிர் அச்சுறுத்தல் விடுத்தாரென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா, கடுவலை பிரதான நீதவான் நீதிமன்றத்தால், நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் நேற்று (12) விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்க, கடுவலை பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டார்.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் 2 மற்றும் 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில், தலங்கம பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிடுமாறும் உத்தரவிட்ட பிரதான நீதவான், சாட்சியாளர்களை அச்சுறுத்தக் கூடாதெனவும் எச்சரித்தார்.

மேர்வின் சில்வாவின் தேர்தல் பணிகளுக்காக, மாலக்க சில்வா, குறித்த வர்த்தகரிடம் நிதி கோரியுள்ளார் என்றும் அதற்கு அந்த வர்த்தகர், அந்தப் பணத்தை வழங்காமை

> **“ 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டார். அத்துடன், ஒவ்வொரு மாதமும் 2 மற்றும் 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில், தலங்கம பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிடுமாறும் பிரதான நீதவான் உத்தரவிட்டார்**

காரணமாக, அவருக்கு மாலக சில்வா உயிர் அச்சுறுத்தல் விடுத்தாரென்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர், நேற்று முன்தினம் (11) இரவு 8.40 மணியளவில், தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அமைச்சரவை

‘யதார்த்தபூர்வமாக அமைக்கப்பட்டது’

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்துக்கு ஏற்ப, தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, நடைமுறைச் சாத்தியமானதும் யதார்த்தமானதுமான அமைச்சரவையின் எண்ணிக்கை திட்டமிடப்பட்டுள்ளது என, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்நிகழ்வு, கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல்மடுவ மண்டபத்தில், நேற்று (12) இடம்பெற்றது.

இது குறித்து, தனது பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர், சுபீட்சமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணித்த செயற்றிறன் வாய்ந்த அமைச்சரவை ஒன்றின் தேவை குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

“அமைச்சுக் கட்டமைப்பை அமைப்பதில், தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது” என, ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

‘இட்டுகம’ நிதிய மீதி அதிகரிப்பு

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன், இட்டுகம (செய் கடமை) கொவிட் - 19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி, 1,564,200,821.95 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இந்நிதியத்துக்கு நிதியுதவி செய்ய விரும்புபவர்கள், காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் www itukama.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ, பங்களிப்புச் செய்யமுடியும்.

0760700700/ 0112320880/ 0112354340/ 0112424012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு, மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குருநாகல் மேயர் உட்பட ஐவரையும் கைதுசெய்ய

இடைக்கால தடையுத்தரவு

குருநாகல் இராசதானி காலத்தைச் சேர்ந்த ‘புவனேகபாகு ஹோட்டல்’ என்றழைக்கப்படும் இரண்டாம் புவனேகபாகு மன்னனின் சட்டசபை மண்டபம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகர மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண உள்ளிட்ட 5 பேரையும், ஓகஸ்ட் 24ஆம் திகதி வரை கைதுசெய்வதற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால், நேற்று (12) இடைக்காலத் தடை

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தன்னைக் கைது செய்வதைத் தடுத்து நிறுத்தக் கட்டளையிடுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை வலுவற்றதாக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான ஏ.எச்.எம். டி. நவாஸ் மற்றும் சோபிதா ராஜகருணா ஆகியோர் அடங்கிய நீதிபதி குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மேற்கண்டவாறு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முதல் சபை அமர்வுக்கு

‘சொக்கா மல்லி’ வருவார்?

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு, வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள “சொக்கா மல்லி” எனப்படும் பிரேமலால் ஜயசேகர, 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதியைக் கோரியுள்ளாரென்று, சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில், சிறைச்சாலைகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கோரிக்கை, சிறைச்சாலைகள் தலைமையகத்தால் நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை, நீதி அமைச்சு வழங்கும் பட்சத்தில், 20ஆம் திகதியன்று, பிரேமலால் நாடாளுமன்றத்துக்கு வருகை தரலாமென்று நம்பப்படுகின்றது. தற்போது, வெலிக்கடை சிறையின் வைஓ மண்டபத்தில், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் பிரேமலால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், இரத்தினபுரி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகர, 142,037 வாக்குகளைப் பெற்று, மாவட்டத்தில் 2ஆம் இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அலி சப்ரிக்கு நீதி அமைச்சு:

பிரதமருக்கு மங்கள பாராட்டு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலின் கீழ் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியை, நீதி அமைச்சராக நியமிக்க எடுத்த முடிவுக்கு, முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், பிரதமருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைச்சரவையின் மற்ற உறுப்பினர்கள் தொடர்பில் அந்தளவுக்குத் தனக்கு திருப்பிதியில்லை யெனவும் நியமனம் பெற்றுள்ள இராஜாங்க அமைச்சர்களுக்குரிய விடயங்கள் கேலிக்குரியதாக உள்ளனவெனவும், மங்கள சமரவீர தனது டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ரிஷாட்டிடம்

ஆறு மணிநேர வாக்குமூலம்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீன், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில், நேற்று (12) காலை 9.30 மணியளவில் ஆஜரானார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே, ரிஷாட் பதியூதீன், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானார்.

இதன்போது அவரிடம், சுமார் 6 மணிநேரமாக வாக்குமூலம் பதியப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புத் திணைக்களத்தில் நேற்றைய தினம் (11) ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குருநாகல் அரச சபைக் கட்டடத்தின்

‘இடிபாடுகள் கண்டுபிடிப்பு’

குருநாகல் அரச சபைக் கட்டடத்தின் இடிபாடுகளை, தொல்பொருள் திணைக்களம் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளதாக, அத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், குருநாகலில் பழைய ஆளுநர் கட்டடம் அமைந்துள்ள இடத்திலேயே, இந்த இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளனவெனவும் அரசவை இருந்த இடத்திலேயே பழைய ஆளுநர் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை கண்டுப்பிடிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த ஆளுநர் கட்டடத்தை, அருங்காட்சியகமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கிறிஸ்துவுக்குப் பின் 1293 முதல் 1341 வரையான குருநாகல் இராஜதானி காலப்பகுதியில், பல்வேறு கட்டடங்கள் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டு உள்ளனவெனவும், பேராசிரியர் செனரத் திஸாநாயக்க கூறினார்.

இராஜாங்க அமைச்சர்களின் விவரங்கள்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், நேற்று (12) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல்மடுவ மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இராஜாங்க அமைச்சர்கள் 39 பேர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் 23 பேர் தொடர்பான விவரங்கள் வருமாறு,

01. சமல் ராஜபக்ஷ: உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்

02. பிரியங்கர ஜயரத்ன: வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்

03. துமிந்த திஸாநாயக்க: சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி

04. தயாசிறி ஜயசேகர: பத்திக், கைத்தரி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள்

05. லசந்த அழகியவன்ன: கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு

06. சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளே: சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு

07. அருந்திக்க பெர்னான்டோ: தென்னை, கித்துள், பனை மற்றும் இறப்பர் செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல்

08. நிமல் லன்சா: கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்

09. ஜயந்த சமரவீர: களஞ்சிய வசதிகள், கொல்களன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப்படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி

10. ரொஹான் ரணசிங்க: காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துகள் அபிவிருத்தி

11. கனக ஹேரத்: கம்பனித் தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலைத் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தல் மற்றும் தேயிலை ஏற்றுமதி மேம்பாடு

12. விதுர விக்ரமநாயக்க: தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள்

13. ஜானக்க வக்கும்புர: கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு

14. விஜித பேருகொட: அறநெறிப் பாடசாலைகள், பிக்குமார் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள்

15. ஷெஹான் சேமசிங்க: சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு அரச வளங்கள் அபிவிருத்தி

16. மொஹான் டி சில்வா: பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள், இரசாயனப் பசளைகள் மற்றும் கிருமிநாசினி பயன்பாட்டு ஒழுங்குபடுத்தல்

17. லொஹான் ரத்வத்த: இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார் கைத்தொழில்கள்

18. திலும் அமுனுகம: வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில்

19. விமலவீர திஸாநாயக: வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி

20. தாரக பாலசூரிய: பிராந்திய உறவு அலுவல்கள்

21. இந்திக்க அநுருத்த: கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு

22. காஞ்சன விஜேசேகர: அழகு மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி, ஆழ்கடல் பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி

23. சனத் நிஷாந்த: கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி

24. சிறிபால கம்லத்: மகாவலி வலயங்கள் சார்ந்த அகழிகள், வாய்க்கால்கள் மற்றும் வாழ்விடங்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

25. சரத் வீரசேக்கர: மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள்

26. அநுராத ஜயரத்ன: கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள், நீர்த்தேங்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி

27. சதாசிவம் வியாழேந்திரன்: தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி

28. தேனுக விதான கமகே: கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

29. சிசிர ஜயக்கொடி: சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி, சமுதாய சுகாதாரம்

30. பியல் நிஷாந்த டி சில்வா: மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள்

31. பிரசன்ன ரணவீர: பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள் , மரப்பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாடு

32. டீ .வீ. சானக: விமான சேவைகள், ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி

33. டீ.பீ.ஹேரத்: கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள்

34. சஷீந்திர ராஜபக்ஷ: நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கமத்தொழில்

35. நாலக்க கொடஹேவா: நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள்கள் அகற்றுதல் மற்றும் சமுதாயத் துப்பரவேற்பாட்டு அலுவல்கள்

36. ஜீவன் தொண்டமான்: தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள்

37. அஜித் நிவாட் கப்ரால்: நிதி மற்றும் மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி சீர்திருத்தம்

38. சீதா அரம்பேபொல: திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல்

39. சன்ன ஜயசுமன: மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்

அறிவித்தல்

கீழ் காணும் கம்பனி, 2007 இல் இல. 07 கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9(1) இன் நியதிகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டதற்கான அறிவித்தல்.

ரன்பிம செராமிக்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட்
பி.வி 00201122
இலக்கம் 60/7/பு. கண்டி வீதி. திஹாரிய. நிட்டம்புவ

பெஸ்டன் என்டபிரைசஸ் (ப்ரைவேட்) லிமிடெட்
பி.வி 00225460
இலக்கம். 185. ஈபர்ட் லேன். கல்தேமுல்ல. மொரட்டுவ.

தியஸ்டா வோட்டர் டெக் (ப்ரைவேட்) லிமிடெட்
பி.வி 00225415
இலக்கம் 150. கார்கில்ஸ் கட்டடம். நீர்கொழும்பு வீதி. மல்கடுவவ. குருநாகல்.

சதேயு என்டப்ரைசஸ் (பிரைவேட்) லிமிடெட்
பி.வி 00225606
இலக்கம். 2/15. சமன் மாவத்தை. கலவிலவத்த. ஹோமாகம.

நேஷன்ஸ் டிஜிட்டல் ஹொஸ்பிட்டல் (ப்ரைவேட்) லிமிடெட்
பி.வி 00225428
இலக்கம். 632. முத்தெட்டுகொட வீதி. தலங்கம வடக்கு. பத்தரமுல்ல.

பணிப்பாளர்கள்

வீதிகளில் உலா வரும்

‘யானைகளுக்கு உணவு வழங்க வேண்டாம்’

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வேண்டுகோள்

எம்.ஏ.எம். ஹசனார்

யால சரணாலயம், கதிர்காமம் வீதிகளில் உலா வரும் யானைகளுக்கு உணவு வழங்க வேண்டாமென, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யால சரணாலயத்திலும் கதிர்காமம் வீதிகளிலும் உலா வரும் காட்டு யானைகள், அவ்வீதிகளில் செல்லும் வாகனங்களை வழி மறித்து, உணவு கேட்டுத் தொல்லை கொடுப்பதாக, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

யால சரணாலயத்துக்கும் கதிர்காமத்துக்கும் பயணிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளின் வாகனங்களை மாத்திரமன்றி, பயணிகள் போக்குவரத்து பஸ்களையும் இடைமறித்து, காட்டு யானைகள் உணவு கேட்டுத்தொல்லை கொடுப்பதாகவும் இதனால் இவ்வீதிகளில் செல்வோர், தாம் கொண்டு செல்லும் உணவுகளையும் பூஜைக்கெனக் கொண்டு செல்லும் பழங்களையும் காட்டு யானைகளுக்குக் கொடுத்து விட்டு மரணப் பயத்தில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

முன்னைய காலத்தில், ஒரு யானை மாத்திரமே, வீதியோரத்தில் படுத்தவாறு ஒரு காலை நீட்டி, உணவு கேட்டதாகவும் உணவு வழங்கினால் மாத்திரம், தனது காலை மடித்து, வாகனங்களைச் செல்ல வழி விட்டதாகவும் தெரிவிக்கும் வாகன சாரதிகள், உணவு வழங்காவிடின் வாகனங்களுக்குள் தும்பிக்கையை நீட்டி, தொல்லை தந்ததாகவும் தெரிவித்தனர்.

எனினும், அண்மைக் காலமாக இவ்வீதிகளில் யானைகள் கூட்டம் கூட்டமாக நின்று, உணவு கேட்டுத் தொல்லை தருவதாகவும் இந்த யானைகளைக் காட்டுக்குள் விரட்டியடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மேற்படி வீதிகளில் பயணிக்கும் போது, யானைகளுக்கு உணவு வழங்க வேண்டாமெனவும் அவற்றுக்கு அருகில் சென்று புகைப்படங்களை எடுக்க வேண்டாமெனவும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சொத்து விவரங்களை அறிவிக்காத

வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விவரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்பு மனுத் தாக்கல் செய்து, முதல் மூன்று மாதங்களுக்குத் தமது சொத்து விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன்னர் தமது சொத்து விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை, தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், வேட்பு மனுத்தாக்கல் செய்து, தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளதாக, பெப்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தவில்லையென, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதற்கமைய, சொத்து விவரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்குப் பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

20ஆம் திகதியன்று

‘நாடாளுமன்றம் வருவார் பிள்ளையான்’

கனகராசா சரவணன், வ.சக்தி

இம்மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய நாடாளுமன்ற அமர்வில், தடுப்புக் காவல் சிறையிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொள்வார் எனவும் அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், கட்சியின் செயலாளர் பூ. பிரசாந்தன் தெரிவித்தார்.

தமது தலைவர், நாடாளுமன்றம் சென்ற பிற்பாடே ஏனைய நடைமுறைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தமிழர்கள் ஆண்ட சபையை, மீண்டும் தமிழர்கள் ஆள்வதற்கான தலைமைத்துவத்தை ஏற்பதற்குத் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, “நடந்து முடிந்த தேர்தல், கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியும் தனித்துவமும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற பாரிய செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட மக்கள், அதிகமான வாக்குகளை வழங்கி, 04 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வந்துள்ளனர்.

“எனவே, நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் ஒரே கூரையின் கீழ், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக தமிழர்களின் இருப்பைப் பாதுகாப்பதற்காக ஒரே கூரையின் கீழ் பயணிக்க வேண்டுமென, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பகிரங்கமாக அழைப்பு விடுகின்றது.

“பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது பிணையில் விடுதலை செய்யமுடியாது. ஆனால், முதலமைச்சராக இருந்தவருக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் போடப்பட்டமை மிகவும் வேடிக்கைக்குரிய விடயம்.

“எது எப்படியாக இருந்தாலும் சட்டத்தின் அடிப்படையில் அவர் வெளிவருவதற்கான அனைத்து விடயங்களும் முடிவடைந்துள்ளன. அதற்காக மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றோம். மிகவிரைவில் சட்டத்துக்கு முன் அவர் நிரபராதியாக வெளியில் வருவார்” என்றார்.

துணைவேந்தர் பதவிக்காக

ஐவர் பேரவைக்கு முன்மொழிவு

எண். ராஜ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையிலும் மதிப்பீட்டின் அடிப்படையிலும், 5 பேர் பேரவைக்கு முன்மொழியப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையிலும் மதிப்பீட்டின் அடிப்படையிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்களை. ஜனாதிபதியின் தெரிவுக்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்கான, பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம், நேற்று (12) நடைபெற்றது.

இதன்போது, விஞ்ஞான பீடம், தொழில்நுட்பப் பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும் கணிதப் புள்ளி விவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா முதலாமிடத்திலும் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் இரண்டாமிடத்திலும் வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி மூன்றாமிடத்திலும் பேராசிரியர் அபே குணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக்குழுவால் முன்மொழியப்பட்டுள்ளனர்.

இத்துடன், முன்னாள் துணைவேந்தரும் கணிதப் புள்ளிவிவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் நான்காவது இடத்திலும், மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ்.ரவிராஜ் ஐந்தாவது இடத்திலும் முன்மொழியப்பட்டுள்ளனர்.

புள்ளிவிவரவியல் துறைப் பேராசிரியர் செ.இளங்குமரன், மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் திறமைப் பட்டியல், பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, இன்றைய தினம் (13) அனுப்பி வைக்கப்படும்.

நல்லூர் கந்தசுவாமி சூர்யோற்சவம்...

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தின் 19ஆம் நாள் திருவிழாவான நேற்று (12) சூர்யோற்சவம் நடைபெற்றது. காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து, 07 குதிரைகள் பூட்டிய ரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான், உள்வீதி, வெளிவீதியுலா வந்தார்.

(படப்பிடிப்பு – எம். றொசாந்த்)

கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட யுவதி

காதலனுடன் மீட்பு

எஸ். நிதர்ஷன், எண். ராஜ்

யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்குப் பகுதியில் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட யுவதி, மல்லாகத்தில் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் நால்வர் கொண்ட குழுவொன்று, 20 வயது யுவதியைக் கடத்திச் சென்றதாக, யுவதியின் பெற்றோர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதையடுத்து, கோப்பாய் பொலிஸார், மல்லாகம் பகுதியில் வைத்து நேற்றையதினம் (12) மாலை யுவதியையும் அவரைக் கூட்டிச்சென்ற இளைஞனையும் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், யுவதி, மேற்படி இளைஞனை நீண்ட நாள்களாக காதலித்து வந்ததாகவும் பெற்றோர், யுவதிக்கு திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தமையால், இளைஞன், யுவதியை அழைத்துச் சென்றுள்ளார்.

தாம் வெள்ளை வானில் செல்லவில்லை என்றும் மோட்டார் சைக்கிளில் சென்றே யுவதியை அழைத்துச் சென்றதாகவும் பொலிஸ் விசாரணையில் இளைஞன் தெரிவித்துள்ளார்.

சௌபாக்கியா செயற்றிட்டத்தின் கீழ்

நிலக்கடலை அறுவடை

வி.சுகிர்தகுமார்

சௌபாக்கியா தேசிய உணவு உற்பத்தி செயற்றிட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் சிறுபோக நிலக்கடலை அறுவடை விழா, அக்கரைப்பற்று மேற்கு விவசாய விரிவாக்கல் காரியாலயத்தின் வழிகாட்டலின் கீழ், நேற்று (12) நடைபெற்றது.

அக்கரைப்பற்று மேற்கு விவசாய விரிவாக்கல் காரியாலயத்தின் பொறுப்பதிகாரி வே.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற அறுவடை விழா நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அஹமட் சனீரும் விசேட அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.றாசீக்கும் கலந்துகொண்டார்கள்.

அத்துடன், விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் எஸ். எச்.ஏ.நிகார், ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் பிரிவின் பொறுப்பதிகாரி பிர்னாஸ் ஹரிஸ், பாரி நிப்ராஸ் உள்ளிட்ட அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மகாவலி கமத்தொழில் நீர்ப்பாசனம், கிராமிய அபிவிருத்தி அமைச்சு, விவசாயத் திணைக்களத்தால் இறக்குமதி செய்யப்படும் 16 பயிர்களை, உள்நாட்டில் உற்பத்தி செய்வதை விரைவாக ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ், நிலக்கடலை விதைகளையும் நிதியுதவிகளையும் இலவசமாக வழங்கி வருகின்றது.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று மேற்கு விவசாய விரிவாக்கல் காரியாலயத்தின் வழிகாட்டல், தொழில்நுட்ப உதவிகள், ஆலோசனை, பங்களிப்பு ஆகியவற்றுடன் பயிரிடப்பட்ட நிலக்கடலை அறுவடை நிகழ்வை அதிதிகள் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

ஏறாவூர் படுகொலையின்

முப்பதாவது ஆண்டு பிரார்த்தனை நிகழ்வு

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஏறாவூர் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு, படுகொலை செய்யப்பட்டவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஏறாவூர் காட்டுப்பள்ளிவாசலில், நினைவுப் பேரவையின் தலைவர் அல்ஹாஜ் எம்.எல். அப்துல் லத்தீப் தலைமையில், நேற்று (12) நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு, ஏறாவூர் நகரிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் ஒரே இரவில் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் 121 பேர் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக, வருடாந்தம் ‘ஏறாவூர்-ஸுஹதாக்கள் (சொர்க்கவாசிகள்) நினைவுப் பேரவையால் இந்நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரார்த்தனை நிகழ்வுகளில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், மார்க்க அறிஞர்கள், சமூக சேவைச் செயற்பாட்டாளர்கள், ஊர்ப்பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

‘தூய்மையான வவுனியா நகரம்’

செயற்றிட்டம் ஆரம்பம்

க.அகரன்

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில், வவுனியா நகர சபையினருடன் இணைந்து சூழலைப் பாதுகாக்கும் சமூக நலன் செயற்றிட்டமான ‘தூய்மையான வவுனியா நகரம்’ எனும் செயற்றிட்டம், வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நேற்று (12) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் சமூக நலன் சார்ந்த செயற்றிட்டத்தின் கீழ், வவுனியா நகர்ப்பகுதிகளில் முக்கிய இடங்களில் வைப்பதற்காக முதற்கட்டமாக 36 குப்பைத்தொட்டி வைத்தலும் அதனுடன் இணைந்த மரநடுகை செயற்றிட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் தலைவர் எஸ்.சுஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன், உப நகரபிதா கு.குமாரசாமி, செயலாளர் இ.தயாபரன், நகரசபை உறுப்பினர் ரி.கே. இராஜலிங்கம் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தியா

ஜம்மு காஷ்மிரின் புல்வாமாவில்

படைவீரர் பலி; பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்

இந்தியாவின் ஜம்மு காஷ்மிரின் புல்வாமா மாவட்டத்தில், பாதுகாப்புப் படைகள் நேற்றுக் காலையில் நடவடிக்கையொன்றை ஆரம்பித்ததையடுத்து இடம்பெற்ற மோதலில் படைவீரரொருவரும், பயங்கரவாதியொருவரும் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட பயங்கரவாதியின் அடையாளமும், அவரது தொடர்பும் ஆராயப்படுவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

புல்வாமாவின் கம்ரஸிபோரா கிராமத்தில் தேடுதல் நடவடிக்கையொன்றை பாதுகாப்புப் படைகள் ஆரம்பித்த நிலையில் அடையாளங்காணப்படாத பயங்கரவாதியொருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்த காஷ்மிர் வலயப் பொலிஸார், அப்பகுதியில் பாதுகாப்புப் படைகள் தேடுதல் நடவடிக்கையைத் தொடர்வதாகத் தெரிவித்துள்ளனர்.

கமரஸிபோரா கிராமத்தில் பயங்கரவாதிகள் இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே நேற்று அதிகாலை பாதுகாப்புப் படைகள் தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இரண்டு படைவீரர்கள் காயமடைந்ததாகவும், சிகிச்சையின்போது ஒருவர் இறந்ததாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். பயங்கரவாதி கொல்லப்பட்ட இடத்திலிருந்து ஏ.கே றைபிளும், சில கிரனேட்களும் மீட்கப்பட்டனவென அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ. அமெரிக்கா

உப ஜனாதிபதியாக

கமலா ஹரிஸை தெரிவுசெய்த பைடன்

ஐக்கிய அமெரிக்காவில் இவ்வாண்டு நவம்பர் மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன், தனது உப ஜனாதிபதியாக கமலா ஹரிஸை நேற்று முன்தினம் தெரிவுசெய்துள்ளார்.

அந்தவகையில், ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான பதவியொன்றை பெற்றுக் கொண்ட முதலாவது கறுப்பினப் பெண்மணியாக ஐக்கிய அமெரிக்காவின் செனட்டரான கமலா ஹரிஸ் மாறியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்பைச் சாடுவதற்கு ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் உப ஜனாதிபதியான ஜோ பைடனுக்கு தயாரான பங்காளரொருவர் கமலா ஹரிஸ் மூலம் கிடைத்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவில் இனரீதியான பாகுபாடு தொடர்பான சமூகப் போராட்டங்கள் மாதக்கணக்காக அந்நாட்டைப் பாதித்திருந்த நிலையில், தனது உப ஜனாதிபதியாக கறுப்பினப் பெண்மணியொருவரைத் தெரிவுசெய்யும்

அதிகரித்த அழுத்தத்தில் ஜோ பைடன் காணப்பட்டிருதார்.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இடமொன்றைப் பெற்றுக் கொண்ட முதலாவது ஆசிய அமெரிக்கர் கமலா ஹரிஸ் ஆவார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த 55 வயதான கமலா ஹரிஸ், இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னர் போட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

செனட்டராக 2016ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டபோது இரண்டாவது கறுப்பின ஐக்கிய அமெரிக்க செனட்டராக கமலா ஹரிஸ் காணப்பட்டிருந்தார்.

அந்தவகையில், ஜனநாயகக் கட்சியின் மிகவும் விசுவாசமான வாக்காளர்களான ஆபிரிக்க அமெரிக்கர்களைத் திரட்டுவதற்கு உதவக்கூடியவராக கமலா ஹரிஸ் காணப்படப் போகின்றார். நான்காண்டுகளுக்கு முன்னர் 20 ஆண்டுகளில் கறுப்பின வாக்காளர்களிடையேயான வீழ்ச்சியாலேயே ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம், ஜனநாயகக் கட்சியின் ஹிலாரி கிளின்டன் அதிர்ச்சியாகத் தோல்வியடைந்தார்.

தென் கரோலினா முதன்மைத் தேர்தல்களில் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் சரிந்து கொண்டிருந்த ஜோ பைடன், கறுப்பின வாக்காளர்களாலேயே மீட்கப்பட்டிருந்தார். அந்தவகையில் முக்கியமான போட்டியிடங்களான மிச்சிகன், பென்சில்வேனியா, விஸ்கோசின், ஜோர்ஜியா, புளோரிடாவில் கறுப்பினர் வாக்காளர்கள் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

இராஜினாமா செய்யவும்...

மாலி ஜனாதிபதி இப்ராஹிம் பூபக்கர் கெய்ட்டாவை இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி மாலித் தலைநகர் பமகாகோவில் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் வீதிகளை நிறைத்திருந்தனர்.

ஈராக்

'துருக்கி பாதுகாப்பு அமைச்சரது விஜயத்தை இரத்து செய்த ஈராக்'

இன்று இடம்பெறவிருந்த ஈராக்குக்கான துருக்கி பாதுகாப்பமைச்சரின் விஜயத்தை நேற்று முன்தினம் ஈராக் இரத்துச் செய்ததாக அறிக்கையொன்றில் ஈராக்கின் வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடுமையான எதிர்ப்பை பதிவு செய்வதற்காகவும், துருக்கியின் தாக்குதல்கள் மற்றும் மீறல்களை ஈராக்கின் உறுதிப்படுத்தப்பட்ட நிராகரிப்பை அறிவிப்பதற்கும் துருக்கித் தூதுவரை ஈராக்கின் வெளிநாட்டமைச்சு அழைத்துள்ளதாக மேற்குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு ஈராக்கிலுள்ள சிடகன் பகுதியில், துருக்கி ட்ரோன் தாக்குதலொன்றில் துருக்கிய, ஈரானிய எல்லைக்கருகே ஈராக்கின் எல்லைக் காவலர்களின் இரண்டு அங்கத்தவர்களும், அவர்கள் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநரும் நேற்று முன்தினம் கொல்லப்பட்டதாக ஈராக்கிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியா

கர்நாடகாவில் தனியாஸ் பஸ் தீப்பிடித்து விபத்து:

ஐவர் பலி

இந்தியாவின் கர்நாடகாவில் தனியார் பஸ்ஸொன்று தீப்பிடித்து எரிந்ததில் அதில் பயணம் செய்த ஐவர் உடல் கருகிப் பலியாகினர்.

கர்நாடகாவின் சித்ரதுர்கா மாவட்டத்திலுள்ள ஹிரியூர் பகுதியில் நேற்றுக் காலை தனியார் பஸ்ஸொன்று தீப்பிடித்து எரிந்தது. கே.ஆர். ஹல்லி தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 32 பயணிகளுடன் சென்று கொண்டிருந்தபோது இயந்திரக் கோளாறு காரணமாக பஸ்ஸில் தீப்பிடித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் இரண்டு குழந்தைகள், ஒரு பெண் உட்பட ஐவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர்,

பஸ்ஸில் பற்றியிருந்த தீயை அணைத்ததோடு காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதைத் தொடர்ந்து விபத்து நடந்த பகுதியை ஹிரியூர் ஆய்வாளர் ராதிகா பார்வையிட்டார்.

தற்போது காயமடைந்தவர்கள் மாவட்ட அரச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து ஹிரியூர் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

தென்சூடான்

ஆயுதக்களைவில் வன்முறை:

81 பேர் பலியாகியுள்ளனர்

தென்சூடானின் வராப் மாநிலத்தில் ஆயுதக்களைவை மேற்கொண்டிருந்த அரசாங்கப் படைகளுக்கும், ஆயுதந்தரித்த பொதுமக்களுக்குமிடையிலான கடும் மோதலில் குறைந்தது 81 பேர் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் லுல் ருவாய் கொங் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பெரிய டொஞ் பகுதியிலுள்ள ஆயுதந்தரித்த சில இளைஞர்கள், பாதுகாப்புப் படைகளுடன் மோத ஆரம்பித்த நிலையிலேயே கடந்த வாரயிறுதியில் இரண்டு நாள்கள் மோதல் வெடித்ததாக லுல் ருவாய் கொங் கூறியுள்ளார்.

எதனால் மோதல் வெடித்தது என உடனடியாகத் தெரியவில்லை என லுல்

ருவாய் கொங் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இறந்தவர்களில் 55 பேர் பாதுகாப்புப் படைகளின் அங்கத்தவர்கள், 26 பேர் பொதுமக்கள் எனவும், இன்னொ 31 படையினர் காயமடைந்ததாக லுல் ருவாய் கொங் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா

சென்னை விமானநிலையத்தில் தமிழ் தெரிந்த பாதுகாவலர்கள்

இந்தியாவின் நாடாளுமன்ற கீழ்ச்சபை உறுப்பினர் கனிமொழியிடம் இந்தி தெரியாததால் இந்தியரா எனக் கேட்டதால் சர்ச்சை எழுந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் தமிழ் தெரிந்த பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கனிமொழி சென்னை விமானநிலையம் சென்றபோது பெண் பாதுகாவலலொருவர் இந்தி தெரியாததால் இந்தியரா எனக் கேட்டதாக வெளியான செய்தி கடும் சர்ச்சையை எழுப்பியது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலாக எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்திய நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர் ப. சிதம்பரம், இந்தி தெரிந்த மத்திய ஊழியர்களை ஆங்கிலமும் தெரிந்து கொள்ள வலியுறுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், சென்னை விமானநிலையத்தில் தமிழ் தெரிந்த பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிற்பாதுகாப்புப் படை தகவல் தெரிவித்துள்ளது. கனிமொழியிடம் கேள்வி எழுப்பிய பெண் காவலரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்தியா

பெங்களூருவில் பொலிஸாரின் சூட்டில்

மூவர் கொல்லப்பட்டனர்

இந்தியாவின் கர்நாடகாவின் தலைநகர் பெங்களூருவில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டசபை உறுப்பினரொருவரும் உறவினரொருவரால் பதியப்பட்டதாகக் கூறப்படும் பேஸ்புக் பதிவொன்று தொடர்பான வன்முறையால் நேற்று முன்தினமிரவு பொலிஸாரின் சூட்டில் மூவர் கொல்லப்பட்டதுடன், 60 பொலிஸார் காயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், வன்முறை, கல்லெறி, பொலிஸார் மீதான தாக்குதலுக்காக 110 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு டசின் கார்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழுத்தியதுடன், காங்கிரஸின் சட்டசபை உறுப்பினர் ஸ்ரீனிவாஸ் மூர்த்தியின் பெங்களூருவிலுள்ள வீட்டைச் சூழ்ந்திருந்தனர்.

இந்நிலையில், பேஸ்புக்கில் தகவலைப் பதிந்ததாகக் கூறப்படும் ஸ்ரீனிவாஸ் மூர்த்தியின் மருமகன் நவீன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வன்முறைக் கூட்டத்தைக் கலைப்பதற்கு பொலிஸார் லத்தியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

பெங்களூருவின் கிழக்கு பகுதியிலுள்ள டி.ஜி ஹல்லி, கே.ஜி ஹல்லி பகுதிகளிலேயே குறித்த சம்பவங்கள் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் நிலையமொன்றில் வைக்கப்பட்டிருந்த 200 மோட்டார் சைக்கிள்கள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டதுடன், வன்முறையால் பொலிஸ் நிலையமொன்றும் சேதமடைந்துள்ளது.

இந்தியா

எடப்பாடியே என்றும் முதலமைச்சர் என்பது

'கட்சியின் கருத்தல்ல'

இந்தியாவின் தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிசாமியே என்றும் முதலமைச்சர் என்று தமிழ்நாடு அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறியிருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.இ.அ.தி.மு.க) கருத்தாக எடுத்துக் கொள்ள முடியாது என தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார்

தெரிவித்துள்ளார்.

சென்னை காசிமேட்டில் செய்தியாளர்களைச் சந்தித்த ஜெயக்குமாரிடன் ராஜேந்திர பாலாஜி கூறியிருப்பது குறித்து செய்தியாளர்கள் கேள்வியெழுப்பிய நிலையில் அதற்குப் பதிலளித்த ஜெயக்குமார், அ.இ.அ.தி.மு.கவின் முதலமைச்சர் வேட்பாளர் பற்றி பொதுவெளியில் பேசுவது கட்சியைப் பலவீனப்படுத்தும். முதலமைச்சர் வேட்பாளர் குறித்து பொதுவெளியில் பேசுவது ஆரோக்கியமாக இருக்காது.

முதலமைச்சர் வேட்பாளர் குறித்து அ.இ.அ.தி.மு.கவினர் யாரும் கருத்துக் கூறாமல் இருப்பது நல்லது.

நியூசிலாந்து

'நாடாளுமன்றக் கலைப்பு ஒத்திவைக்கப்படுகிறது'

நியூசிலாந்தில் புதிய கொவிட்-19 பரவலையடுத்து பொதுத் தேர்தலொன்றுக்காக நாடாளுமன்றத்தைக் கலைப்பது எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்படுவதாக நியூசிலாந்துப் பிரதமர் ஜசிந்தா ஆர்டன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான முதற்படியாக நேற்றுக் காலையில் நியூசிலாந்து நாடாளுமன்றம் கலைக்கப்படவிருந்தது.

இந்நிலையில், தேர்தலை தள்ளி வைப்பதற்கான தீர்மானமெதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என பிரதமர் ஜசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

ஆசனம் கிடைக்காவிட்டால் பிளவுதான் தீர்வா..?

இம்முறை நடைபெற்று முடிந்திருக்கின்ற பொதுத் தேர்தல், பலருக்குப் பெரும் பாடம் சொல்லிக் கொடுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அசைக்கமுடியாதென மார்தட்டிக்கொண்டிருந்த கட்சிகளையே ஆட்டங்காணச் செய்திருப்பது கவனிப்புக்குரியது. இத்தகைய சூறாவளிக்குள் சிக்குண்ட பழம்பெரும் வேட்பாளர்கள் பலரும் அள்ளுண்டு போயிருப்பதும் கவனிப்புக்குரியது.

நிலைமை இப்படியிருக்கையில், தங்கள் இருப்புகளைக் கோட்டைவிட்ட பலரும் ஒன்றிணைந்து, மாற்றுக் கட்சிகளை உருவாக்கும் திட்டங்கள் தீட்டப்படுவதாகவும் பல கதைகள் அடிபடுகின்றன. இதில், பழம்பெரும் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையும் உள்ளடக்கம் என்பது வேதனைக்குரியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, இம்முறை தேர்தலில் படுதோல்வியடைந்திருந்தார். ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில், அவரது சொந்தத் தொகுதியில் கூட மாவை சேனாதிராஜாவால் வெற்றிபெற முடியவில்லை என்பது பெரும் பின்னடைவாகும். இவ்வாறானதொரு நிலையில், தொடர்ந்தும் கட்சித் தலைமையில் அவர் இருக்க முடியுமா என்ற கேள்வி, அடிமட்டத் தொண்டர்கள் மட்டத்திலும் எழுப்பப்படுவது நியாயமானதுதான். ஆனால், அரசியலில் வெற்றி - தோல்வி என்பது சகஜமானது. காலவோட்டத்துக்கு ஏற்றாற்போல், இத்தகைய முடிவுகள் மாறிக்கொண்டிருப்பது அனைவருக்கும் பொதுவானது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் முப்பதுக்கும் மேற்பட்டதடவை அரசியல் தோல்வியைச் சந்தித்திருக்கிறார். இருப்பினும், விடாமுயற்சியினூடாகத் தன் கட்சியை ஒருங்கிணைத்து, அதில் வெற்றியீட்டியும் காட்டியிருந்தார். மீண்டும் இப்போது தோல்வி அவரைத் துரத்தத் தொடங்கியிருக்கிறது. அதற்குக் காரணம், தோல்வியிலிருந்து பாடம் கற்கத் தவறியமைதான். இதே நிலைமையை மாவை சேனாதிராஜாவும் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது.

ஆசனங்களை இழந்துவிட்டோம் என்பதற்காகப் பிளவுபட்டு, மாற்றுக் கட்சிகளை உருவாக்குவது தீர்வாகாது. இழந்த செல்வாக்கை எவ்வாறு மீளக் கட்டியெழுப்புவது என்பதைத் திறம்படச் செய்பவர்தார் திறமையான கட்சித் தலைவராக இருக்க முடியும். அதைவிடுத்து, பக்கத்தில் இருப்பவர்களின் தாளத்துக்கு ஆடுபவர்களெல்லாம் கட்சியை ஆரோக்கியமாக வழிநடத்த முடியாதவர்கள் என்பதைக் காலம் பலதடவை நிரூபித்திருக்கிறது. வடக்கில் மாத்திரமல்ல, மலையத்திலும் சில புதிய கூட்டணிகள் உருவாகலாம் எனக் கதையடிபடுகிறது. இவை அனைத்துமே, வாக்கு வங்கியைப் பிளவுபடுத்தும் கைங்கரியங்கள்தான் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றுக்குப் பலியாகாமல், ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு, பட்டறிவைப் பெற்று ஒருமித்துப் பயணிப்பதே ஆரோக்கியமானதாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

எதற்கும் “நான்...நான்” என்பவன், ‘தான்’ யார் எனத் தெரியாதவன் ஆகின்றான். எமக்கும் தெரிந்தவைகளைவிடத் தெரியாதவைகளே அதிகம்.

பாமரனுக்குத் தெரிந்த இயற்கை பற்றிய அறிவு, படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இருக்கும் என்று சொல்ல முடியாது. தங்களுக்குத் தெரிந்தவையாகச் சிலவிடயங்கள் இருப்பினும், அவை பற்றி முழுமையாகவோ பகுதியாகவோ திருப்திகரமாகத் தெரிந்துவைத்திருக்கிறார்களா?

முழுமையைத் தேட எத்துணை முயன்றாலும், அறிவு மூலம் பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியாமல் இருப்பது உண்மைதான்.

இந்தப் பூமியே சூட்சுமங்கள் நிறைந்தது. கொரோனா வைரஸின் தாக்கத்தால், முழு உலகமும் அல்லல்ப்படுகின்றது. இதில், ‘நான்தான்’ என்று எப்படிப் பெருமைப்படுவது?

அற்ப அறிவுடையோர், தன்னை அறிவின் விஸ்வரூபம் எனக் காட்டுவது வேடிக்கையிலும் வேடிக்கை. ஆணவம் அகன்றால், நல்லறிவு மலரும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

‘குரங்கின் கை பூமாலை’யான கூட்டமைப்பு

புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்றைக்கும் இல்லாதளவுக்கான பின்னடைவை, இந்தப் பொதுத் தேர்தலில் சந்தித்து நிற்கின்றது.

2015ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளோடு ஒப்பிடும் போது, கூட்டமைப்பு சுமார் ஒரு இலட்சத்து 88 ஆயிரம் வாக்குகளை, இந்தத் தேர்தலில் இழந்திருக்கின்றது.

தமிழர் தேசம் எங்கும் வாக்களிப்பு சதவீதம், கடந்த பல பொதுத் தேர்தல்களைக் காட்டிலும் இம்முறை அதிகரித்திருந்தது. ஆனபோதிலும், கூட்டமைப்பு வாக்கிழப்பைச் சந்தித்திருக்கின்றது. 2015ஆம் ஆண்டில், நாடாளுமன்றத்துக்குள் 16 உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு, இம்முறை 10 உறுப்பினர்களோடு செல்கின்றது.

கடந்த காலத்தில், தமிழர் தேசத்தில் ஏக நிலைக்கு அண்மித்த வெற்றியைப் பெற்று, தமிழ்த் தேசியம் சார் அரசியலில் கூட்டமைப்பு, தனி ஆவர்த்தனம் செய்து கொண்டிருந்தது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, சுமார் இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் வாக்குகளைக் கூட்டமைப்பு இழந்திருந்தது.

அந்தப் பின்னடைவுக்கான காரணங்களை ஆராய்வது தொடர்பில், கூட்டமைப்பு பெரிய கரிசனையைக் காட்டவில்லை. வட்டார முறைத் தேர்தலே, வாக்கிழப்புக்குக் காரணம் என்கிற அளவில், கூட்டமைப்பு விடயங்களைக் கடந்துவிட்டது.

தமிழ்த் தேசிய பரப்பில், தங்களுக்கு எதிராக எந்தத் தரப்பாலும் எழுச்சிபெற முடியாது என்கிற கூட்டமைப்பின் நினைப்பும், இந்தத் தேர்தலில் முட்டுச்சந்துக்குள் முட்டிக் கொண்டு நிற்கும் அளவுக்கான தோல்விக்குக் காரணமாகி இருக்கின்றது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதனும், மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவனேசத்துரை சந்திரகாந்தனும் (பிள்ளையான்) பெற்றிருக்கின்ற விருப்பு வாக்குக்களின் எண்ணிக்கை, கூட்டமைப்பின் பெரும் வீழ்ச்சியை எடுத்துக் காட்டியிருக்கின்றன.

தமிழர் தேசத்தில், இன விகிதாசார அடிப்படையில் யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் தமிழ் மக்கள் அதிகமுள்ள மாவட்டங்கள். இந்த மாவட்டங்களில் தமிழ்த் தேசிய அரசியலுக்கு அப்பாலான நிலைப்பாடுகளுள்ள அதுவும், ராஜபக்ஷக்களின் அரசியலைப் பிரதிபலிக்கின்ற இருவர், அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருப்பதென்பது, தோல்விகளிலேயே பெருந்தோல்வியாகும். அதுதான், “பிரபாகரன் மண்ணை வென்று விட்டோம்...” என்று அங்கஜனின் தம்பிகள், யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் கொக்கரிப்பதற்கும் காரணமாகி இருக்கின்றது.

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம், கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர், இந்தப் பத்தியாளரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார். “...நாங்கள், உள்ளூராட்சித் தேர்தலில் அடைந்த பின்னடைவை, ஓரளவுக்குச் சரி செய்துவிட்டதாகவே எண்ணினோம். வாக்களிப்பு சதவீதமும் அதனை உணர்த்துவதாக நம்பினோம். ஆனால், நாங்கள் அடைந்திருக்கின்ற பின்னடைவு, எதையும் சரி செய்திருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது...” என்றவாறு கூறினார்.

‘கண் கெட்ட பின்னரான சூரிய நமஸ்காரம்’ ஆக, அந்தக் கூற்றை எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் இந்தப் பத்தியாளர் நினைத்தார். ஆனால், இவ்வளவு பெரிய பின்னடைவுக்குப் பின்னரும், அதனைப் புரிந்து கொள்ளாமல், கூட்டமைப்புக்குள் அரங்கேறும் கூத்துகளைப் பார்த்தால், ‘குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை’யின் நிலையே, ஞாபகத்துக்கு வருகின்றது. அதுவும், கிடைத்த ஒற்றைத் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை முன்வைத்து நிகழ்ந்த போட்டி என்பது, அருவருக்கத்தக்க அளவுக்குச் சென்றிருக்கின்றது.

அம்பாறையைத் தவிர்த்து, தமிழர் தேசத்தின் ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும், தமிழ் நாடாளுமன்ற உறுப்புரிமை உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகளின் சார்பிலும் நாடாளுமன்ற உறுப்புரிமை காக்கப்பட்டிருக்கின்றது.

இப்படியான நிலையில், தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியாகத் தன்னை முன்னிறுத்தும் கூட்டமைப்பு, அம்பாறையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்புரிமையை உறுதி செய்வது சார்ந்து செயற்படுவதுதான் தார்மிகக் கடமையாகும்.

ஏனெனில், அம்பாறையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமைக்கான பெரும் பொறுப்பை, கூட்டமைப்பு கொண்டிருக்கின்றது. அதுவும், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தது மாத்திரமல்லாமல், கருணா அம்மான் என்கிற விநாயகமூர்த்தி முரளிதரனிடம் சில ஆயிரம் வாக்குகளால் தோற்றிருப்பது என்பது, மிக மோசமான கட்டமாகும். எப்போதுமே, யாழ். மய்யத்துக்குள் நின்று சிந்தித்துச் செயற்படும் நிலையே, இந்தத் தோல்விக்கும் காரணமாகும். இவ்வாறான நிலையில், கிடைத்த சந்தர்ப்பத்தைக் கொண்டு சரி செய்வதுதான், மக்கள் சார்பு அரசியல் தலைமைகளின் கடமையாகும்.

கூட்டமைப்பின் ஒற்றைத் தேசிய பட்டியல் உறுப்புரிமைக்காக, அம்பாறையில் இருந்து தவராசா கலையரசன் நியமிக்கப்பட்டு, வர்த்தமானி ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறார். தோல்வி முகத்திலிருக்கின்ற கட்சியான கூட்டமைப்பின், வரவேற்கக்கூடிய தீர்மானம் இதுவாகும்.

ஆனால், இந்தத் தீர்மானத்துக்கு எதிராக, யாழ்ப்பாணத்துக்குள் குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் யாழ். மய்யக்குழு மிகவும் கீழ்த்தரமான நிலைப்பாட்டை எடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்பின் தேசியபபட்டியல் நியமனம் என்பது, எப்போதுமே இரா. சம்பந்தனின் தீர்மானங்களின் போக்கிலேயே நிகழ்ந்து வந்திருக்கின்றது. அவர், என்றைக்குமே பங்காளிக் கட்சிகளிடம் அது குறித்து ஆலோசனை நடத்தியதும் இல்லை. ஆலோசனைகளைப் பங்காளிக் கட்சிகள் கூற முனைந்தாலும் கண்டு கொண்டதுமில்லை.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தோற்றபோது, அவருக்குத் தேசியபட்டியலை வழங்குமாறு புளொட், டெலோ தலைவர்கள் கோரினார்கள். ஆனால், கட்சித் தலைவராக இருந்து கொண்டே தோற்றுப் போயிருக்கிற ஒருவருக்கு, எவ்வாறு தேசியபட்டியலை வழங்க முடியும் என்று சம்பந்தன் கேள்வி எழுப்பினார். அதற்கு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்கள் ஒத்துதியிருந்தனர்.

ஆனால், இம்முறை மாவை சேனாதிராஜா தோல்வி அடைந்திருக்கின்ற நிலையில், அவருக்குத் தேசியபட்டியலைப் பெறும் நோக்கில், தமிழரசுக் கட்சியின் யாழ். மய்யக்குழு, பங்காளிக் கட்சிகளிடம் ஓடியிருக்கின்றது என்பது, ‘வாழ்க்கை ஒரு வட்டம்’ என்கிற சினிமா வசனத்தை ஞாபகப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில், தேசியபட்டியல் நியமனங்களின் போது, பங்காளிக் கட்சிகளின் கருத்துகளைக் கிஞ்சித்தும் செவி மடுக்காத தரப்பு, இம்முறை அவர்களின் கருத்தைக் தூக்கிக் கொண்டோட முனைவது அபத்தமான வாதமே.

இம்முறை அம்பாறைக்கான வேட்பாளர் பட்டியலில், டெலோவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனை, அந்தக் கட்சிக்குத் தெரியாமல் துரோகத்தனமாகப் பறித்து, தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராஜா முன்னிறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பில், இந்தப் பத்தியாளர் ஏற்கெனவே, ‘அறம் மறந்த மாவை’ எனும் பத்தியூடாகக் கேள்வி எழுப்பியிருந்தார். கூட்டமைப்பின் தலைமையும் தமிழரசுக் கட்சியின் தலைமையும் கூட்டமைப்புக்குள் ஏதேச்சதிகாரப் போக்கிலேயே செயற்பட்டு வந்திருக்கின்றன. அவை ஒரு போதும் பங்காளிக் கட்சிகளை மதித்து வந்திருக்கவில்லை. அதன் ஒரு கட்டமே இம்முறையும் தேசியபட்டியல் நியமனத்தில் நிகழ்ந்திருக்கின்றது.

ஆனால், அந்த நியமனத்தில் அம்பாறையிலுள்ள தமிழ் மக்களுக்கான தார்மிகம் காக்கப்பட்டிருக்கின்றது. அதனைக் குறித்து எந்தவித விமர்சனங்களையும் முன்வைக்க முடியாது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும், தமிழரசுக் கட்சியின் யாழ். மய்யக்குழுவின் நிலைப்பாடுகளில் நின்றே இம்முறை யோசித்திருக்கின்றன. ஏற்கெனவே, பறிபோய்க் கொண்டிருக்கின்ற அம்பாறை என்கிற தமிழர் நிலத்தின் இருப்பைத் தக்க வைப்பது சார்ந்து சிந்தித்திருந்தால், கலையரசனுக்கான தேசியபட்டியல் நியமனத்துக்கு எதிராகச் செயற்பட்டிருக்க மாட்டார்கள்.

எல்லோருமே யாழ்ப்பாணத்துக்குள் இருந்து சிந்தித்துச் செயலாற்றும் தன்மை என்பது, கூட்டமைப்பின் தொடர் தோல்விகளுக்கு வழி ஏற்படுத்திக் கொண்டிருக்கும். அத்தோடு, கிழக்கு தமிழ் மக்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுவது, கூட்டமைப்பை கிழக்கிலிருந்து முற்றாகவே அகற்றிவிடும்.

இன்னொரு பக்கம், தேர்தலில் பின்னடைவு கண்டதும் வரும் ஞானம், கூட்டமைப்பின் தலைவர்கள் சிலருக்கு வந்திருக்கின்றது. அது, தேர்தலில் வென்றிருக்கின்ற தமிழ்த் தேசியகட்சிகளான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவற்றை இணைத்துக் கொண்டு, புதிய அமைப்பாக முன்னோக்கி நகர்வது பற்றியது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு, நாடாளுமன்றத்துக்குள் ஏதேச்சதிகாரம் புரியப்போகும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக, தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றினைந்து செயற்படுவது தவிர்க்க முடியாதது. அது, தமிழ் மக்களின் பெரும் எதிர்பார்ப்பாகும். ஆனால், தேர்தல் கூட்டு போன்றதொரு நிலையை நோக்கிச் செல்ல வேண்டிய எந்தத் தேவையும் இல்லை.

ஏனெனில், கேள்விகள் கேட்பதற்கு யாருமே இல்லாத ஏக நிலைதான், கூட்டமைப்பின் இன்றைய நிலைக்குக் காரணமானது. கூட்டமைப்பு என்கிற மக்களுக்கான கட்டமைப்பு, ஒரு கட்டத்தில் பதவிகளுக்காகப் புடுங்குப்படும் கோஷ்டியிடம் சேர்வதற்கும் அதுதான் காரணம். தமிழரசுக் கட்சியின் யாழ். மய்யக்குழு அரங்கேற்றிக் கொண்டிருக்கும் தேர்தலுக்குப் பின்னரான காட்சிகளும் அதனையேதான் பிரதிபலிக்கின்றன.

கூட்டமைப்பு, குறிப்பாகத் தமிழரசுக் கட்சி, இந்தத் தேர்தல் பின்னடைவில் இருந்து உடனடியாகக் கற்றுக் கொண்டு, தன்னை மீளக் கட்டமைக்க வேண்டும். மாறாகப் பதவிகளுக்காகத் தங்களுக்குள் குத்து வெட்டுப்பட்டுக் கொண்டிருந்தால், வரும் மாகாண சபைத் தேர்தலில் ராஜபக்ஷக்களிடம் வடக்கையும் கிழக்கையும் இழந்துவிட்டு, ‘இலவு காக்க’ வேண்டி வரும்.

கடிதங்கள்

வீதியில் காணப்படும் குழியால் உயிரச்சம்

நுவரெலியா பூங்கா வீதியில், காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் அமைந்துள்ள பாதையில், மழைக் காலங்களில் நீர் நிரம்பி, அங்குள்ள கடைத்தொகுதிகளுக்குள் நீர் புகுந்து விடுகின்றமை காரணமாக, அந்தப் பகுதியைப் புனரமைப்பதற்கு நுவரெலியா மாநகர சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இந்தப் புனரமைப்புப் பணியானது மிக நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, இதன் ஒரு பகுதியில் பாரிய குழி ஒன்றும் தோண்டப்பட்டுள்ள நிலையில், அதை மூடுவதற்கான நடவடிக்கைகளை நுவரெலியா மாநகர சபை எடுக்கவில்லை. இதன் காரணமாக, இப்பகுதியில் இதுவரை 22 வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தப் பிரதான பாதை வழியாவே, நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில் இருந்து நுவரெலியா நீதிமன்றத்துக்கும் மாவட்ட செயலகத்துக்கும் பிரதேச செயலகத்துக்கும் மாநகர சபைக்கும் பாடசாலைக்கும் பொது மக்கள் பயணிக்க வேண்டும். அடிக்கடி வாகன நெரிசல் ஏற்படும் இந்தப் பகுதியில், நுவரெலியா நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைந்துள்ளதால், இங்கு ஒலி எழுப்ப முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில், பல விபத்துகள் ஏற்பட்டிருந்த போதிலும் தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை, ஆனால், அவ்வாறு உயிரிழப்பு நிகழ்ந்துவிட்டால், அதற்கு முழுமையான பொறுப்பையும் நுவரெலியா மாநகர சபையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, இத்தகைய உயிரச்சம் மிக்க, நிலையிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு நுவரெலியா மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

–டி. ஷங்கீதன்

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில்

புதிய அமைச்சரவைக்குள்ள பொறுப்பு

ச. சேகர்

நாடாளுமன்ற தேர்தல் நிறைவடைந்து, புதிய பிரதமரும் அமைச்சரவையும் பதவி ஏற்றாயிற்று. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எய்தியுள்ள வெற்றியினூடாக, பொது மக்கள் பெருமளவு எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதை உணர முடிகின்றது.

கடந்த நாடாளுமன்றத்தில் காணப்பட்ட சுமார் அறுபத்தாறு அங்கத்தவர்கள், இம்முறை தெரிவாகியிருக்கவில்லை. இது மொத்த நாடாளுமன்ற அங்கத்தவர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்காகும். இதனூடாக புதிதாக நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள அங்கத்தவர்களுக்கு தெளிவான செய்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதி செயலாற்றாதவர்கள் குறுகிய காலத்துக்கே அவர்களை பிரதிநிதிப்படுத்த முடியும். பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுஜன பெரமுன அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது. இவற்றை நிறைவேற்றுவதற்கான காலம் இனிவரும் காலமாகும்.

இந்த உறுதிமொழிகளில் பொருளாதார வளர்ச்சி என்பது, மிகவும் சவால்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. தொகைமதிப்பு, புள்ளிவிவரங்கள் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், 2020 முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 1.6 சதவீதம் சரிவை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி 3.7 சதவீதம் வளர்ச்சியடைந்திருந்தது. இந்நிலையில், நாட்டில் கொவிட்-19 முடக்க நிலை ஏற்படுவதற்கு முன்னதாகவே பொருளாதார வளர்ச்சி எதிர்மறையான பெறுமதியைப் பதிவு செய்துள்ளமையானது மிகவும் கவலையளிக்கும் விடயமாக அமைந்துள்ளது.

> **பொருளாதார நெருக்கடி, கொவிட்-19 நெருக்கடி போன்றன காணப்படும் போதிலும், பல மாவட்டங்களில் எதிர்பார்த்ததை விட அதிகளவானோர் வாக்களித்திருந்தனர்**

பொருளாதாரத்தின் நான்கு பிரதான உள்ளம்சங்களான விவசாயம், தொழிற்றுறை, சேவைகள், தயாரிப்புகள் மீது வரிக்குறைப்பு நிவாரணங்கள் போன்றன அடங்கியுள்ளன. இவை முதலாம் காலாண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியில் தமது பங்களிப்பை முறையே 7.3%, 28.4%, 58.3%, 6% பங்களிப்பை பதிவு செய்திருந்தன.

எவ்வாறாயினும், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக, பொருளாதாரத்தின் பல துறைகள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தன. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்திருந்தது என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில், முதல் காலாண்டில் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி விவசாயம், தொழிற்றுறை செயற்பாடுகளில் 5.6%, 7.8% பெறுமதியை வீழ்ச்சியாக பதிவு செய்திருந்ததுடன், சேவைகள் துறை மாத்திரம் 3.1% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்ததாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் காலாண்டின் தரவுகள் இதனை விட மோசமானதாக அமைந்திருக்கும் என்பதை அனுமானிக்க முடிகின்றது. கடந்த வார முற்பகுதியில் Moody's முதலீட்டு சேவைகள் நிறுவனத்தின் துணை நிறுவனமான ICRA லங்கா தரப்படுத்தல் முகவர் நிறுவனம் வெளியிட்டிருந்த வருட மத்திய மீளாய்வின் பிரகாரம், முதல் காலாண்டு பொருளாதார வீழ்ச்சி 0.2% வீழ்ச்சியை பதிவு செய்யும் என்பதுடன், இரண்டாம் காலாண்டில் இந்தப் பெறுமதி 6.9% எனும் பாரதூரமான பெறுமதியைப் பதிவு செய்யும் என மதிப்பிட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான எதிர்வுகூறல்களில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக முதல் காலாண்டு வளர்ச்சி பெறுபேறுகளை தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி அண்மையில் அறிவித்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில், இந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீத அதிகரிப்பை பதிவு செய்யும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும், பிந்திய தரவுகளின் அடிப்படையில், இந்த வளர்ச்சியை எய்துவது என்பது எட்டாக்கனியாக அமைந்துள்ளது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 28 சதவீதமானோரைக் கொண்ட விவசாயத்துறையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன், நாட்டின் பொருளாதாரத்தை சமநிலைப்படுத்த அரசாங்கத்தின் தலையீடு தெளிவான தேவையாக அமைந்துள்ளது. ஊக்குவிப்பு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க வேண்டிய அழுத்தம் அரசாங்கத்தின் மீது காணப்படும் நிலையில், நிதித் துண்டுவிழும் தொகையை கட்டுப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில், இந்த ஆண்டு இப்பெறுமதி 9% ஐ எய்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக, பயனற்ற முயற்சிகளில் அரசாங்கத்தால் பணத்தை பாய்ச்ச முடியாது. ஒக்டோபர் மாதத்தில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளதுடன், இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் பெருமளவு கடன்களை மீளச் செலுத்த வேண்டிய நிலைக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில், நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்பட்டில் நிலையாக பேணுவதற்கு மாற்று வழிமுறைகளை இனங்காண வேண்டிய நிலைக்கும் முகங்கொடுத்துள்ளது.

உள்நாட்டு தொழில்துறைகளை ஊக்குவிப்பதனூடாக குறுங்கால அடிப்படையில் வளர்ச்சியை பதிவு செய்யக்கூடியதாக இருக்கும்.

> **எவ்வாறாயினும், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக, பொருளாதாரத்தின் பல துறைகள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தன. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்திருந்தது என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது**

ஆனாலும் பெருவாரியான ஏற்றுமதி, முதலீடுகளின்றி, நிலைபேறான வளர்ச்சியை ஈட்டுவதற்கு இலங்கை பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்கும். எதிர்வரும் புதிய நாடாளுமன்ற அமர்வுகளின் போது, ஜனநாயக செயன்முறைகளை பின்பற்றுவதை உறுதி செய்வதுடன், நாட்டில் காணப்படும் பொருளாதார சார் பிரச்சினைகளை சீர் செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதற்குரிய அத்தியாவசியமான காலமாக இனிவரும் காலம் அமைந்திருக்கும்.

பொருளாதார நெருக்கடி, கொவிட்-19 நெருக்கடி போன்றன காணப்படும் போதிலும், பல மாவட்டங்களில் எதிர்பார்த்ததை விட அதிகளவானோர் தமது வாக்குகளை பயன்படுத்தியிருந்தனர். இதனூடாக நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, புதிய மறுமலர்ச்சியை எதிர்பார்க்கின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவே, புதிதாக நியமனம் பெற்றுள்ள அமைச்சரவை அங்கத்தவர்கள் தமது பொதுப் பணிகளையும், நாட்டுக்காக தமது அர்ப்பணிப்புகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்பது வாக்களித்த பொது மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. மொட்டு மலர்ந்துள்ள நிலையில், மக்களின் நம்பிக்கைகளும் கைகூடும் என எதிர்பார்க்கின்றோம்.

பங்குச் சந்தை

CSE COLOMBO STOCK EXCHANGE

2020.08.12

அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண்	S&P SL20 விலைச் சுட்டெண்
5,220.57	2,277.20

நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்

2020.08.12

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

விலை உயர்ந்த நிறுவனங்கள்	முன்னைய விலை	நேற்றைய விலை	மாற்றம்
எஸ் எம் பி லீசிங்	0.40	0.50	0.10
ப்ளூ டயமன்ட்ஸ்	0.50	0.60	0.10
ஹொரண	18.80	20.70	1.90
லைட்ஹவுஸ் ஹொட்டல்	24.60	29.00	2.60
கொன்வீனியன் ஃபூட்	569.90	649.20	52.30
எலைன்ஸ்	36.90	38.80	2.50
மெக்வூட்ஸ் எனர்ஜி	1.60	1.70	0.10
சி எஃப் ஐ	53.40	56.70	3.30
ரோயல் பால்ம்ஸ்	13.60	14.40	0.80
கொமர்சியல் பேங்	76.60	81.00	4.40

விலை சரிவடைந்த நிறுவனங்கள்	முன்னைய விலை	நேற்றைய விலை	மாற்றம்
இன்ட்ரஸ்ரியல் எஸ்ப்.	0.30	0.20	(0.10)
எஸ்.எம்.பி லீசிங்க (சாதாரண)	0.30	0.20	(0.10)
புளூ டயமன்ட் (சாதாரண)	0.30	0.30	(0.10)
பலாங்கொட	14.40	12.70	(1.70)
அகலவத்த	18.70	16.60	(2.10)
சிங்கபுத்ரா பின். (விருப்பு)	4.80	4.50	(0.30)
மல்வத்த (சாதாரண)	6.50	6.10	(0.40)
போகல கிரபைட்	15.40	14.50	(0.90)
கொட்டகல	6.90	6.50	(0.40)
மஸ்கெலியா	12.20	11.50	(0.70)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

TT RATES
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 12 AUGUST 2020

CURRENCY	BUYING RATE	SELLING RATE
Australian Dollar	128.02	134.12
Canadian Dollar	135.28	140.67
Chinese Yuan (Renminbi)	25.67	27.24
Euro	212.05	219.50
Japanese Yen	1.68	1.76
Singapore Dollar	131.28	136.48
Sterling Pound	236.07	243.77
Swiss Franc	196.43	204.06
US Dollar	181.84	186.14

COUNTRY	CURRENCY	INDICATIVE RATE
Bahrain	Bahrain Dinar	488.80
Kuwait	Kuwait Dinar	602.52
Oman	Oman Rial	478.65
Qatar	Qatar Riyal	50.61
Saudi Arabia	Saudi Arabian Riyal	49.13
UAE	UAE Dirham	50.16

சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை

சுத்திகரிக்கப்படாத எண்ணெய்	
பிரெண்ட்	44.99 அமெ.டொ. / பீப்பாய்
ஒபெக்	45.21 அமெ.டொ. / பீப்பாய்

சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை	
பெற்றோல்	47.15 அமெ.டொ. / பீப்பாய்
டீசல்	48.54 அமெ.டொ./ பீப்பாய்
மண்ணெண்ணெய்	44.07 அமெ.டொ. / பீப்பாய்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2020 ஒகஸ்ட் 12 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்

மறு நாள்	5.53
7 நாள்கள்	5.92
1 மாதங்கள்	6.05
3 மாதங்கள்	6.96
6 மாதங்கள்	7.61
12 மாதங்கள்	8.50

SLT குழுமத்தின் செயற்படு இலாபம் 55%ஆல் அதிகரிப்பு

குழுமத்தின் வருமானம் அதிகரிக்கப் பிரதான காரணம், பல்வேறு கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்த காலப்பகுதிகளில், வீடுகளில் இருந்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மக்கள் இணையத் தளத்தைப் பயன்படுத்தியமை ஆகும்.

கடுமையான செலவினக் கட்டுப்பாடுகள் மூலம் தேய்மானத்துக்கு முந்திய செலவினங்கள் பெரிதும் குறைக்கப்பட்டதோடு, அது வருடாந்த அடிப்படையில் 7% அதிகரிப்பைக் காண்பித்துள்ளது. அத்துடன், EBITDA சதவீதமானது, 40.5% வரை வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன், இவற்றை வாடிக்கையாளர்களின் தேவைகளையும் புதிய வளர்ச்சிகளையும் பூர்த்தி செய்வதற்காக இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்நியச் செலாவனிகளில் ஏற்படும் நட்டங்கள் ரூபாய் 0.9 பில்லியனாகக் காணப்பட்டது. இது, கடந்த வருடத்தில் ரூபாய் 15 மில்லியனாகக் காணப்பட்டது. குழுமத்தின் ஏனைய வருமானம் ரூபாய் 0.5 பில்லியன் வரை வளர்ச்சியடைந்து, வருடாந்த அடிப்படையில் 85% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

குழுமத்தின் வரிக்கு முந்திய இலாபம் ரூபாய் 5.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 22% வளர்ச்சியைக் காண்பித்துள்ளது. அத்துடன், வரிக்குப் பிந்திய இலாபம் ரூபாய் 4.6 பில்லியனாகக் காணப்பட்டதோடு, இது வருடாந்த அடிப்படையில் 31% வளர்ச்சியாகும். இந்த இலாபங்களின் வளர்ச்சிக்கு பிரதான காரணம், செயற்திறன் மிக்க செலவின முகாமைத்துவ முறைகளாகும். 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் SLT ரூபாய் 8.1 பில்லியனை நேரடி, மறைமுக வரிகளாகச் செலுத்தியது. இது அரசாங்கத்துக்குக் கிடைத்த சிறந்ததொரு வருமானமாகும்.

குழுமத் தலைவர் ரொஹான் பெர்ணான்டோ, கருத்து வெளியிடுகையில், "கொவிட்-19 காரணமாக, புதிய வகையிலான பல்வேறு வர்த்தக சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிட்டாலும், தலைமைத்துவம் பல்வேறு சவால்களை, ஒரே குடும்பமாக இணைந்து செயற்பட்டு சமாளித்தமைக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முழு நாட்டுக்கும் எந்தவிதமான தடங்கலற்ற சேவைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதோடு, அதற்கு மேலதிகமாக, சலுகை பெக்கெஜ்கள், இலவச டேட்டா வழங்கல்கள் என்பனவற்றையும் வாடிக்கையாளர்களுக்கு கொடுத்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

Group Chairman-SLT

Group CEO-SLT

CEO-SLT

COO-SLT

குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரத்ன தெரிவிக்கையில், "சவால்கள் நிறைந்த இந்தச் சூழ்நிலையில், எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதும் நிதி திரவத்தன்மையைப் பேணுவதும் சவால் மிக்கதாகவே இருந்தது. இவற்றில் எமது குழும நிறுவனம், இணை நிறுவனங்கள் ஆகிய அனைத்தையும் ஒன்றாகக் கருதி செயற்பட்டோம். இதன் ஓர் அம்சமாக SLT Human Capital Solutions (Pvt) Ltd (HCS) இன் ஊழியர்களை SLT க்குள் நிரந்தர ஊழியர்களாக இணைத்துக் கொண்டமை ஊழியர்கள், முகாமைத்துவத்துக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதாக அமையும்" என்று கூறினார்.

குழும நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா கூறுகையில், "SLT பல்வேறு குழும சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, ' SMILE WITHIN ' என்ற தொனிபொருளின் கீழ் நடத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் மூலம், எமது துணை நிறுவனமான மொபிடெலுடன் இணைந்து ஒரு மில்லியன் முகக் கவசங்களை இலவசமாக வழங்கியதோடு, 'AL Kuppiya', ' e-Siphala ' ஆகிய ஒன்லைன் ஊடான கல்வித் திட்டங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினோம். மேலும், லங்கா சதொசவுடன் இணைந்து ஒன்லைன் வர்த்தகத் தளம் ஒன்றை உருவாக்கியதோடு, EPIC நிறுவனத்துடன் இணைந்து ' Helaviru ' பொருளாதார நிலையம் என்ற ஒன்லைன் தளத்தை உருவாக்கி, விவசாயம், கால்நடை வள உற்பத்திகளுக்கான சந்தை ஒன்றை உருவாக்கிக் கொடுத்துள்ளோம்" என்று தெரிவித்தார்.

> **கடுமையான செலவினக் கட்டுப்பாடுகள் மூலம் தேய்மானத்துக்கு முந்திய செலவினங்கள் பெரிதும் குறைக்கப்பட்டதோடு, அது வருடாந்த அடிப்படையில் 7% அதிகரிப்பைக் காண்பித்துள்ளது**

பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெர்னாண்டஸ் கூறுகையில், "கொவிட்-19இனால் ஏற்பட்ட சவால்கள் மூலம், எமது பைபர் விஸ்தரிப்பு வேலைத் திட்டம் சற்று பின்னடைவைக் கண்டது. இதனால் FTTH (Fiber to the Home) (வீடு தோறும் பைபர்) இணைப்புகளாவன, தேசிய Fiberization வேலைத் திட்டம் ஊடாக முன்னெடுக்கப்பட இருந்தது. SLT அண்மையில் இலங்கை துறைமுக அதிகார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இதன் மூலம் Data, Voice தீர்வுகளை Fiber தொழில்நுட்பம் மூலம் பெற்றுக்கொடுக்க இருக்கிறது. இதற்கு மேலதிகமாக, SLT Microsoft Azure stack hub என்ற புதிய தொழில்நுட்ப தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது, SLT Akaza என்ற கிளவுட் தொழில்நுட்பத்தின் மற்றுமோர் இணைப்பாகக் காணப்படுகிறது" என்று கூறினார்.

அமைச்சரவை அமைச்சர்கள்

மஹிந்த ராஜபக்ஷ – நிதி, புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு

நிமல் சிறிபால டி சில்வா – தொழில் அமைச்சர்

ஜீ.எல்.பீரிஸ் – கல்வி அமைச்சர்

பவித்ரா தேவி வன்னியாரச்சி – சுகாதார அமைச்சர்

தினேஷ் குணவர்த்தன – வெளிநாட்டலுவல்கள்

டக்ளஸ் தேவானந்த – கடற்றொழில் அமைச்சர்

காமினி லொக்குகே – போக்குவரத்து அமைச்சர்

பந்துல குணவர்த்தன – வர்த்தக அமைச்சர்

ஆர்.எம்.சி.பீ. ரத்நாயக்க – வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு

ஜனக பண்டார தென்னகோன் – அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கெஹலிய ரம்புக்வெல்ல – வெகுசன ஊடக அமைச்சர்

சமல் ராஜபக்ஷ – நீர்ப்பாசன அமைச்சர்

டலஸ் அழகப்பெரும – மின்சக்தி அமைச்சர்

ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ – நெடுஞ்சாலைகள்

விமல் வீரவன்ஸ – கைத்தொழில் அமைச்சர்

மஹிந்த அமரவீர – சுற்றாடல் அமைச்சர்

எஸ்.எம். சந்திரசேன – காணி அமைச்சர்

மஹிந்தானந்த அலுத்கமகே – கமத்தொழில் அமைச்சர்

வாசுதேவ நாணயக்கார – நீர்வழங்கல் அமைச்சர்

உதய கம்மன்பில – வலுசக்தி அமைச்சர்

ரமேஷ் பத்திரண – பெருந்தோட்டத்துறை அமைச்சர்

பிரசன்ன ரணதுங்க – சுற்றுலா அமைச்சர்

ரோஹித அபேகுணவர்த்தன – துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை

நாமல் ராஜபக்ஷ – இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர்

அலி சப்ரி – நீதி அமைச்சு

இராஜாங்க அமைச்சர்கள்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 13 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 13, 2020
THURSDAY
VOL: 006/072
RS. 10.00
UPCOUNTRY ★★

Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

'43 வருடங்களுக்குப் பின் பறந்தது கெபினட்'

பா.நிரோஸ்

நுவரெலியா மாவட்டத்துக்கு 43 வருடங்களாக க்கிடைக்கப்பெற்று வந்த அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு இம்முறை கிடைக்கவில்லை என்பது நுவரெலியா மாவட்ட மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தருவதாக, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இரதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்து, மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை நுவரெலியாவில் தெரிவு செய்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும் இந்த மூன்று வேட்பாளர்களும் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

தொடர்ச்சி P2

தாமரை மொட்டில் மலராத கைகள்

தாமரை மொட்டைச் சின்னமாகக் கொண்ட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில், கையை சின்னமாகக் கொண்ட, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர், நேற்றைய அமைச்சரவை நியமனத்துக்குள் உள்வாங்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

கண்டியிலிருந்து மைத்திரி வெறுங்கையுடன் திரும்பினார்

புதிய அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்று, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்படக்கூடுமென பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எவ்விதமான அமைச்சுப் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

தேசிய பட்டியல் வாய்ப்பை

கோட்டைவிட்டார் திலகர்

ஊடகத்திடமும் பேஸ்புக்கிடமும் கேட்கட்டும் என்கிறார் திகா

பா.நிரோஸ்

நுவரெலியா மாவட்டத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் பங்களிப்புச் செய்யவில்லை எனத்

தொடர்ச்சி P2

'சஜித்தின் முடிவுக்கு இணங்குவோம்'

பா.நிரோஸ்

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ள தேசிய பட்டியல் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கே உண்டு எனத் தெரிவித்த அந்த கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தேசிய பட்டியல் விவகாரத்தில் சஜித் எடுக்கும் முடிவுக்கு இணங்குவோம் என்றார்.

கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத் அவர், ஐக்கிய மக்கள் சக்தியை நாமே உருவாக்கினோம். அந்தக் கூட்டணியோடு நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது.

தொடர்ச்சி P2

ஜீவனுக்கு இராஜாங்கம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமான், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

புதிய அமைச்சர்கள்,

தொடர்ச்சி P2

ஜனவரியை குழப்பிய ரணில்

ஐக்கிய தேசிய கட்சிக்குள் தலைமைத்துவம் தொடர்பில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளது. புதிய தலைமைத்துவம் தேவையென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் ஆராய்வதற்காக, ஜனவரி வரையிலும் தானே, கட்சியின் தலைவராக இருப்பேன். அதுவரையிலும் விலகமாட்டேன் என ரணில் அறிவித்துள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

சிநேகபூர்வ சந்திப்பு

எம். செல்வராஜா

தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குழு அங்கத்தவர்களும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேயை, கொழும்பில் அமைந்துள்ள இந்தியன் இல்லத்தில்,

தொடர்ச்சி P2

உ/த பரீட்சை நேர சூசி

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள், நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன அதற்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. உயர்தர புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு அமைவாகவே நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

மஞ்சள் விலை

3,000 ரூபாயைத் தாண்டியது

சுதத். எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதேசத்தில் மஞ்சள் தூளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. இதற்கமைய 1 கிலோகிராம் மஞ்சள் தூளின் விலை, 3,000 தொடக்கம் 3,500 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

இது தொடர்பில்,

தொடர்ச்சி P2

Covid-19 தொற்று நோய் நிலவிய போதிலும், 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் SLT குழுமத்தின் செயற்படு இலாபம் 55% ஆல் அதிகரிப்பு

குழுமத் தலைவர்
ஸ்ரீலங்கா ரெலிகொம்

குழும பிரதம நிறைவேற்று அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

பிரதம நிறைவேற்று அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

பிரதம செயற்பாட்டு அதிகாரி
ஸ்ரீலங்கா ரெலிகொம்

ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி (SLT) குழும நிறுவனம், 2020 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான அதன் நிதித் தகவல்களை வெளியிட்டுள்ளது. நாட்டில் Covid-19 தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், அதன் செயல்பாட்டு இலாபம் ரூபா 6.9 பில்லியன் அதாவது 55% வளர்ச்சியை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில், குழுமத்தின் வருமானம் ரூபா 44.1 பில்லியனாகக் காணப்பட்டது. இது, வருடாந்த அடிப்படையில் 3.6% மிதமான வளர்ச்சியைக் காட்டுகிறது. இதற்கு பிரதான காரணம், SLT மற்றும் அதன் இணை நிறுவனமான மொபிடெல் பிறைவேட் லிமிட்டெட் என்பன இணைந்து, தொற்று நோய்க் காலப்பகுதிகளில் வாடிக்கையாளர்களுக்கு உதவி புரியும் முகமாக, பல்வேறு இலவச பெக்கேஜ்கள், இலவச தரவுகள் போன்றவற்றை வழங்கியமையாகும். மேலும், முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய வருமானம், தொற்று நோய்க் காலப்பகுதியினால் பின்னடைந்ததும் மொத்த வருமானத்தைப் பாதிக்கக் காரணமாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், புரோட்பாண்ட் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, IPTV மற்றும் Career Business services ஆகிய பிரிவுகளில் தனி நபர் வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக வாடிக்கையாளர்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் வளர்ச்சி காணப்பட்டது.

மேலதிக தகவல்களுக்கு 7ஆம் பக்கத்தைப் பார்க்கவும்

PAGE 1 தொடர்ச்சிகள்

‘43 வருடங்களுக்குப் பின் பறந்தது கெபினட்’

நுவரெலியா மாவட்டத்துக்கென கடந்த 43 வருடங்காக இருந்த அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு இம்முறை இல்லாது செய்யப்பட்டுள்ளமை கவலையளிப்பதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். 1977ஆம் ஆண்டு முதல் நுவரெலியா மாவட்டத்துக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி கிடைத்து வந்திருந்தது என்றும் அவர் மேலும் கூறினார்.

கோட்டைவிட்டார் திலகர்

தெரிவித்துள்ள அக்கூட்டணியின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம், தேசிய பட்டியலை திலகர் ஊடகங்களிடமும் பேஸ்புக்கிலுமே கேட்டுப்பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரித்தார்.

கொழும்பில் உள்ள ரமடா ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றபோது, ஐ.தே. கவின் யானை சின்னத்தில் போட்டியிட்டதாலேயே தாம் வெற்றிபெற்றதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர்கள் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

எனினும் இம்முறை தாம், ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றதாகவும் பதுளை மாவட்டத்தில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பெயரைப் பயன்படுத்திப் போட்டியிட்ட செந்தில் தொண்டமான் தோல்வியடைந்துவிட்டார் என்றும் அவர் கூறினார்.

தான் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வியடைந்ததில்லை என்று கூறிய அவர், வெற்றிபெற்றாலும் எதிர்க்கட்சியே எமக்குக் கிடைக்குமென தெரிந்தும் மக்கள் தங்களுக்கு வாக்களித்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்துக்கு கிடைத்து வந்த அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு இல்லாது செய்யப்பட்டுள்ளது என்றும் இதுவே, தற்போதைய அரசாங்கத்துக்கும் எங்களது அரசாங்கத்துக்கும் இடையிலான வித்தியாசம் என்றும் இதன்போது அவர் தெரிவித்தார்.

தனக்கு மாத்திரம் அதிகளவான வாக்குகள் கிடைக்க வேண்டுமென்கிற நோக்கில், தான் செயற்படவில்லை எனக் கூறிய திகாம்பரம், நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மூன்று உறுப்பினர்களையும் வெற்றிபெறச் செய்வதற்கே, தான் பாடுபட்டதாகவும் கூறினார்.

“முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் என்னுடைய கட்சிக்காரர். அவருக்கு தேசிய பட்டியல் வழங்குவேன் என நான் உறுதியளித்திருந்தேன். ஆனால், தேர்தல் காலத்தில் திலகராஜ், என்னுடன் கதைக்கவும் இல்லை. எங்களுக்கு வேலை செய்யவும் இல்லை.

“ஊடகங்களிடமும் பேஸ்புக்கிலுமே அவர் பேசிக்கொண்டிருந்தார். எனவே, ஊடகங்களிடமும் பேஸ்புக்கிலும் தேசிய பட்டியலை கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். என்னிடம் கேட்டிருந்தால் தந்திருப்பேன். எங்களை வெற்றிபெறச் செய்யாதவருக்கு, தேசிய பட்டியலை எவ்வாறு வழங்குவது?” என்றும் இதன்போது அவர் கேள்வியெழுப்பினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு தேசிய பட்டியல் கிடைக்கப்பெற்றால், அதை எவருக்கு வழங்குவதென, கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தீர்மானிப்பார் என்றும் அவர் மேலும் கூறினார்.

தாமரை மொட்டில் மலராத கைகள்

அத்துடன், கடந்த பல அரசாங்கங்களில் அமைச்சரவை அந்தஸ்துள்ள முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களும் இம்முறை ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எவ்விதமான பொறுப்புகளும் வழங்கப்படவில்லை. இதேவேளை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய, எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்டோருக்கு எவ்விதமான பதவிகளும் வழங்கப்படவில்லை.

அத்துடன், அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, விஜயதாஸ ராஜபக்ஷ, சந்திமவீரக்கொடி, டிலான் பெரேரா ஆகியோருக்கும் எவ்விதமான அமைச்சுப் பதவிகளோ, இராஜாங்க அமைச்சின் பொறுப்புகளோ வழங்கப்படவில்லை. மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர்கள் நியமனத்தில், நுவரெலியா மாவட்ட இணைப்புக்குழுத் தலைவராக எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஏனையோர் மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர் பதவிக்கும் உள்வாங்கப்படவில்லை.

கண்டியிலிருந்து மைத்திரி வெறுங்கையுடன் திரும்பினார்

“மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்படக்கூடுமென பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எவ்விதமான அமைச்சுப் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்படவில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் வளாகத்திலுள்ள (மகுல் மடுவ) விருந்தினர் மண்டபத்தில் வைத்து, புதிய அமைச்சரவைக்கான நியமனங்கள் நேற்றுக்காலை வழங்கப்பட்டன.

அங்கு, முன்வரிசையிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமர்ந்திருந்தார். எனினும், எவ்விதமான அமைச்சுப் பொறுப்புகளும் அவருக்கு வழங்கப்படவில்லை. கடந்த கால அரசாங்கங்களில் பல அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவிருந்த அவருக்கு, முக்கியமான அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்படக் கூடுமெனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பொலன்னறுவை மாவட்டத்தில் இம்முறை போட்டியிட்டு 111,137 விருப்பு வாக்குகளைப் பெற்று, மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரியை குழப்பிய ரணில்

ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியபபட்டியல் பதவி, மக்கள் வங்கியின் முன்னாள் தலைவர் நிஷங்க நாணயக்காரவுக்கு ழங்கப்பட்டுவிட்டதெனச் செய்திகள் வெளிவந்தன. எனினும், தேசிய பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்லுமாறு ரணில் விக்கிரமசிங்கவைப் பலரும் வலியுறுத்துவதாகவும் அறியமுடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்துக்குச் சென்றுவிட்டால், கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து நீக்குவது கடினமென மற்றுமொரு தரப்புக் கூறிவருகின்றது. இந்நிலையில், ஜனவரி வரையிலும் தலைவர் பதவியில் இருப்பதாகத் தெரிவித்திருக்கும் ரணில், 2021 ஜனவரி வரையிலுமா அல்லது 2023 ஜனவரி வரையிலுமா இன்றேல், 2030 ஜனவரி வரையிலுமா என்பது தொடர்பில் தெட்டத்தெளிவாகக் கூறவில்லையென சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து விலகுவதற்கு ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே தீர்மானித்திருந்தாலும் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் ஆலோசனைகளுக்கு இணங்க, முன்னைய தீர்மானத்தை அவர், மாற்றிக்கொண்டுள்ளார் என்றும் அதனால்தான், “ஜனவரி“ கதையை அவிழ்த்து விட்டுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

“கட்சிக்குள் தலைமைத்துவம் தொடர்பில் பெரும் பிரச்சினை எழுந்துள்ளது. புதிய தலைமைத்துவம் தேவையென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

உ/த பரீட்சை...

பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தில் பரீட்சைக்கான அட்டவணைகளைப் பார்வையிட முடியும்.

‘சஜித்தின் முடிவுக்கு இணங்குவோம்’

அதனால் சில விடயங்களை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. தேசிய பட்டியல் விவகாரத்தால் எமது பிரதான நோக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

எமக்கு தேசிய பட்டியல் ஒன்று வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாட்டுக்காகவும் ஐக்கிய மக்கள் சக்தியோடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதாலும் அது தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியில் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

தேசிய பட்டியல் ஆசனங்கள் ஏழு மட்டுமே ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்திருக்கிறது. தேசிய பட்டியல் ஆசனங்களில் 10 ஆசனங்கள் கிடைக்குமென நாம் எதிர்பார்த்தோம். தேசிய பட்டியல் விவகாரத்தை வைத்துக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி என்கிற கூட்டணியை உடைக்க விரும்பவில்லை. எனவே சஜித் பிரேமதாஸ இதுத் தொடர்பில் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் தாம் இணங்குவதாகவும் அவர் இதன்போது கூறினார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ஏனைய கட்சிகள் பெற்றுக்கொண்ட ஆசனங்கள் கடந்த முறை பெற்றுக்கொண்டதைவிடக் குறைவானது. ஆனால் 8ஆவது நாடாளுமன்றத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பெற்றுக்கொண்ட 6 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 9ஆவது நாடாளுமன்றத்திலும் தக்கவைத்துக்கொ ண்டுள்ளது எனவும் கூறினார்.

இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்கள் அதிகளவான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, கணிசமான சாதனைகளையும் தாம் படைத்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சி இப்போது இல்லை. ஐக்கிய தேசிய கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவார்களெனவும் கூறிய அவர், ஐக்கிய மக்கள் சார்பில் போட்டியிட்ட கூட்டணியினருக்கு தமிழர்கள் அல்லாத முஸ்லிம், சிங்களவர்களும் வாக்களித்திருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பிரதானக் கூட்டணி தமிழ் முற்போக்குக் கூட்டணியே எனவும் கூறிய அவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெறும் இரண்டு எம். பிகளையே பொதுத்தேர்தலில் பெற்றுக்கொண்டுள்ளது. ஆனால் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு 6 எம்.பிகள் கிடைத்துள்ளனர் எனவும் கூறினார்.

“ஐக்கிய மக்கள் சக்தியை நாமே உருவாக்கினோம். அந்தக் கூட்டணியோடு நாம் நீண்டத் தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. அதனால் சில விடயங்களை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. தேசிய பட்டியல் விவகாரத்தால் எமது பிரதான நோக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை

சிநேகபூர்வ சந்திப்பு

நேற்று (12) சிநேகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் பிரதி தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் உபதலைவர்களான அ. அரவிந்தகுமார், வேலுகுமார், உதயகுமார், முன்னணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர், பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் ஜெகப், அரசியல் துறை பொறுப்பாளர் கவுன்சலர் பானு பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சமகால அரசியல் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகின்றது.

ஜீவனுக்கு இராஜாங்கம்

இராஜாங்க அமைச்சர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு, கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் (மகுல் மடுவ) விருந்தினர் மண்டபத்தில், நேற்று (12) நடைபெற்றது. புதிய அமைச்சரவைக்குள்ளும் புதியவர்கள் மூவர் இணைக்கப்பட்டுள்ளனர். இராஜாங்க அமைச்சர்களாகப் புதியவர்கள் சிலர் நியமிக்கப்பட்டனர்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகித்த பலருக்கு இம்முறை வாய்ப்பளிக்கவில்லை.

புதிய அமைச்சரவை நியமனத்தில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நால்வர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அதில், டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தேசியபட்டியலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சதாசிவம் வியாழேந்திரன், தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகவியலாளர்கள் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

3,000 ரூபாயைத் தாண்டியது

பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். கொவிட் - 19 நெருக்கடிக்கு பின்னர், தங்களுக்கு போதுமான வருமானம் இல்லை என்பதால், வாங்கும் பொருள்களை விலை பார்த்தே கொள்வனவு செய்து வருவதாகவும் இந்நிலையில், உணவுக்கு மிகவும் அத்தியாவசியமான மஞ்சள் தூளின் விலை, பல மடங்காக அதிகரித்துள்ளமையால், அதை சிறிதளவேனும் கொள்வனவு செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள வியாபாரிகள், விலை அதிகரித்து விற்பனை செய்யவேண்டும் என்பது தங்களது விருப்பம் இல்லை என்றும் ஆனால், உரிய முறையில் தங்களுக்கு மஞ்சள் தூள்கிடைக்காதமையே, இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்றும் தெரிவித்தனர்.

பலாங்கொடை நகரசபையில்

ஒரு பதவிக்கு வெற்றிடம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை நகரசபையின் உறுப்பினர் ஒருவருக்கான பதவி வெற்றிடமாகியுள்ளது.

இப்பதவியில் இருந்து அகில சாலிய எல்லாவல, இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நிலையிலேயே, தற்போது இவர் வகித்த பதவி வெற்றிடமாகியுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பாக போட்டியிட்ட இவர், தற்போது காணப்படும் இந்த வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக, கட்சி முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கேம்பிரி தோட்ட மக்களுக்கு

மீண்டும் ஆபத்து

■ நிலமேகம் பிரசாந்த்

அக்கரபத்தனை பிரதேச சபைக்குட்பட்ட கேம்பிரி தோட்ட லயன் குடியிருப்பு, மீண்டும் மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளது என, தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில், 2013ஆம் ஆண்டும் 2017ஆம் ஆண்டும் பாரிய மண்சரிவு ஏற்பட்டது என்றும் இதன்போது தங்களது உடமைகள் பல இழக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்சரிவு ஏற்பட்ட பின்னர், வெறும் மண் மாத்திரமே அகற்றப்பட்டது என்றும் தங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு, எவரும் முன்வரவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

தங்களுக்கு வேறு இடங்களில் வீடுகளைக் கட்டித்தருமாறு பலமுறை அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், தற்போது கடுமையான மழை பெய்து வருவதால், மீண்டும் மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதிகளில் உலா வரும் யானைகள் உணவு

‘கேட்டாலும் கொடுக்காதீர்கள்’

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வேண்டுகோள்

■ எம்.ஏ.எம்.ஹசனார்

யால சரணாலயம், கதிர்காமம் வீதிகளில் உலா வரும் யானைகளுக்கு உணவு வழங்க வேண்டாமென, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யால சரணாலயத்திலும் கதிர்காமம் வீதியிலும் உலா வரும் காட்டு யானைகள், அவ்வீதியில் செல்லும் வாகனங்களை வழி மறித்து, உணவு கேட்டுத் தொல்லை கொடுப்பதாக, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

யால சரணாலயத்துக்கும் கதிர்காமத்துக்கும் பயணிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளின் வாகனங்களை மாத்திரமன்றி, பயணிகள் போக்குவரத்து பஸ்களையும் இடைமறித்து, காட்டு யானைகள் உணவு கேட்டுத்தொல்லை

கொடுப்பதாகவும் இதனால் இவ்வீதியில் செல்வோர், தாம் கொண்டு செல்லும் உணவுகளையும் பூஜைக்கெனக் கொண்டு செல்லும் பழங்களையும் காட்டு யானைகளுக்குக் கொடுத்து விட்டு மரணப் பயத்தில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர்.

முன்னைய காலத்தில், ஒரு யானை மாத்திரம், வீதியோரத்தில் படுத்துக்கொண்டு, ஒரு காலை நீட்டி வீதியை மறித்து, உணவு கேட்டு வந்தது என்றும் உணவு வழங்கினால் மாத்திரமே அது வாகனத்துக்கு வழிவிடும் என்றும் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அந்த யானைக்கு உணவு வழங்காவிடின் வாகனங்களுக்குள் தும்பிக்கையை நீட்டி தொல்லை தந்து வந்தது என்றும் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அண்மைக் காலமாக இவ்வீதிகளில் யானைகள் கூட்டம் கூட்டமாக நின்று, உணவு கேட்டுத் தொல்லை தருவதாகவும் இந்த யானைகளைக் காட்டுக்குள் விரட்டியடிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மேற்படி வீதிகளில் பயணிக்கும் போது, யானைகளுக்கு உணவு வழங்க வேண்டாமெனவும் அவற்றுக்கு அருகில் சென்று புகைப்படங்களை எடுக்க வேண்டாமெனவும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மில்லகந்த கோவிலின் ஆடித்தேர் பெருவிழா

■ சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி புளத்சிங்கள, மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் ஆடித்தேர் பெருவிழா, நாளை (14) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த பெருவிழா, ஞாயிற்றுக்கிழமை (16) வரை தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இதன்பிரகாரம், 14ஆம் திகதி காலை 5.30 மணிக்கு, புண்ணியாக வாசனம், விநாயகர் வழிபாடு, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், விசேட பூஜைகள் நடைபெற்று, மங்கள கொடியேற்றமும் நடைபெறும்.

போலி இரத்தினக்கல்லை வழங்கி

தங்கச் சங்கிலியை அபகரித்தவர் கைது

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

போலியான இரத்தினக்கல் ஒன்றை பெண்ணொருவருக்கு வழங்கி, அவரது கழுத்தில் இருந்த சுமார் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்த நபரொருவரை, பலாங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இரத்தினக்கல், 5 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என்றும் அவசர பணத்தேவை காரணமாக, இந்த இரத்தினக்கல்லை விற்பனை செய்வதாகவும் தெரிவித்துள்ள சந்தேக நபர், அந்தப் பெண்ணிடம் இருந்து, தங்கச் சங்கிலியைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இரத்தினக்கல்லை பெற்றுக்கொண்ட பெண், அதை தனது கணவருக்கு வழங்கியபோது, அதை பரிசீலித்த கணவர், அது போலியானது எனக் கண்டறிந்துள்ளார்.

இதன்பின்னரே, இது தொடர்பாக, பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது, 51 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

‘விருப்பு வாக்கு எண்ணுவதில் முறைகேடு’

இரத்தினபுரி வேட்பாளர் முறைப்பாடு

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

நடைபெற்ற பொதுத் தேர்தலில், விருப்பு வாக்கு எண்ணியதில் முறைகேடுகள் நடைபெற்றதால், நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு தனக்கு இல்லாமல் போனது என, இரத்தினபுரி மாவட்டத்தில், பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட சனீ ரோஹண கொடித்துவக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடமே, இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைகேடு காரணமாக, விருப்பு

> “ நடைபெற்ற பொதுத் தேர்தலில், விருப்பு வாக்கு எண்ணியதில் முறைகேடுகள் நடைபெற்றதால், நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பு தனக்கு இல்லாமல் போனது

வாக்குப்பட்டியலில், தான் 10ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டதாகவும் இதனால், நாடாளுமன்றம் செல்லவிருந்த தனக்கான வாய்ப்பு தடைப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

தனது இந்த முறைப்பாடு தொடர்பில் கவனத்தில் எடுக்காவிடின், இது தொடர்பாக தான் வழக்கு தொடரவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தூணில் பஸ் மோதி விபத்து

■ எஸ்.சதீஸ்

நுவரெலியா பஸ் தரிப்பிடத்தில், தூண் ஒன்றில் மோதி தனியார் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியாவிலிருந்து உடபுஸ்ஸலாவை நோக்கி பயணித்த பஸ்ஸொன்றே, நேற்று (12) இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த

விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் எனினும் பஸ்ஸில் இருந்த எவருக்கும் இதனால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மழையால் மாத்தளையில்

41 வீடுகள் சேதம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கடந்த சில தினங்களாக மாத்தளை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையுடனான வானிலை காரணமாக, நேற்று (12) காலை 41 வீடுகள் சேதமடைந்துள்ளதென, மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மாத்தளை, கலேவல, இரத்தோட்டை, உக்குவல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வீடுகளே சேதமடைந்துள்ளதெனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் சமிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாதிப்புகள் தொடர்பில் மதிப்பீடு செய்த பின்னர், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சமிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலி மாடுகளால்

பதுளையில் விபத்துகள் அதிகரிப்பு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகரில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிரித்துக் காணப்படுவதால், வாகன விபத்துகள் அதிகளவு நடைபெற்று வருகின்றது.

இந்த வாகன விபத்துகளால், கட்டாக்காலி மாடுகளும் உயிரிழப்பதாகவும் அண்மையில் காரொன்று மோதி 3 கட்டாக்காலி மாடுகள் உயிரிழந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இது குறித்து பதுளை மாநகரசபை அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

‘புதிய மாட்டிறைச்சி கடைகளுக்கு அனுமதி இல்லை’

■ மொஹொமட் ஆஸிக்

அக்குறணை பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கண்டி - மாத்தளை பிரதான வீதிக்கு அருகில், புதிதாக மாட்டிறைச்சிக் கடைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது என, அக்குறணை பிரதேச சபைத் தலைவர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்துள்ளார்.

அக்குறணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, சபைத் தலைவர் இஸ்திஹார் இமாமுதீன் தலைமையில், அலவத்துகொடையில் அமைந்துள்ள பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில்

> “ நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் சுற்றாடலுக்கும் மாட்டிறைச்சிக் கடைகள் பாரிய பிரச்சினையாக இருந்து வருவகின்றது

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் சுற்றாடலுக்கும் மாட்டிறைச்சிக் கடைகள் பாரிய பிரச்சினையாக இருந்து வருவதாகவும் இந்த வீதியில் மாத்திரம், ஏற்கெனவே 10 மாட்டிறைச்சிக் கடைகள் அமைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

மலையக மக்களுக்கு எச்சரிக்கை

■ எம்.ஏ.எம்.ஹசனார்

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக, நீர்வீழ்ச்சிகளும் ஆறுகளும் பெருக்கெடுத்துள்ளன.

இதனால், ஆற்றுப் பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என, அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முக்கியமாக, பொதுவெளியில் வேலை செய்பவர்கள், மரங்களுக்குக் கீழ் நிற்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் பனியுடன் கூடிய வானிலை நிலவுவதால், வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துணைவேந்தர் பதவிக்காக

ஐவர் பேரவைக்கு முன்மொழிவு

எஸ். ராஜ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையிலும் மதிப்பீட்டின் அடிப்படையிலும், 5 பேர் பேரவைக்கு முன்மொழியப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையிலும் மதிப்பீட்டின் அடிப்படையிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்களை. ஜனாதிபதியின் தெரிவுக்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்கான, பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம், நேற்று (12) நடைபெற்றது.

இதன்போது, விஞ்ஞான பீடம், தொழில்நுட்பப் பீடம் ஆகியவற்றின் முன்னாள் பீடாதிபதியும் கணிதப் புள்ளி விவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா முதலாமிடத்திலும் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் இரண்டாமிடத்திலும் வணிக முகாமைத்துவ பீடாதிபதி ரி.வேல்நம்பி மூன்றாமிடத்திலும் பேராசிரியர் அபே குணவர்த்தன தலைமையிலான மதிப்பீட்டுக்குழுவால் முன்மொழியப்பட்டுள்ளனர்.

இத்துடன், முன்னாள் துணைவேந்தரும் கணிதப் புள்ளிவிவரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் நான்காவது இடத்திலும், மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ்.ரவிராஜ் ஐந்தாவது இடத்திலும் முன்மொழியப்பட்டுள்ளனர்.

புள்ளிவிவரவியல் துறைப் பேராசிரியர் செ.இளங்குமரன், மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் திறமைப் பட்டியல், பல்கலைக்கழகப் பேரவையின் பரிந்துரையுடன், தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, இன்றைய தினம் (13) அனுப்பி வைக்கப்படும்.

ரணில் உட்பட 10 பேருக்கு நோட்டீஸ்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சித் தலைவர்கள் மூவர் உட்பட, முன்னாள் அமைச்சர்கள் ஐவரை, ஓகஸ்ட் 21ஆம் திகதியன்று, அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு, ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேவர்தன, நேற்று (12) நோட்டீஸ் விடுத்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், மலிக் சமரவிக்ரம ஆகியோருக்கே இவ்வாறு நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜயம்பதி

விக்கிரமரத்ன, ஜே.சீ. வெலிஅமுன ஆகிய இருவருக்கும் நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அமைச்சரின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக்க, அந்த ஆணைக்குழுவுக்கு அளித்த முறைப்பாட்டுக்கு அமையவே, மேலே குறிப்பிட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

'இசுரும்லத்' வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு தொகுதியினருக்கு நிவாரணம் வழங்கியமை, திவி நெகும திணைக்களத்தில் சிலருக்கு நட்டஈடும் ஊக்க ஊதியமும் வழங்கியமை தொடர்பில், தான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை மேலே குறிப்பிடப்பட்ட, பிரதிவாதிகளால், அரசியல் ரீதியில் பழிவாங்கும் செயற்பாடாகுமென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டை அடுத்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ளோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் உபாலி அபேரத்ன, முறைப்பாட்டை ஓகஸ்ட் 21ஆம் திகதியன்று அழைக்குமாறு கட்டளையிட்டார்.

ரணிலின் கூட்டத்தில் பங்கேற்றோர் மௌனம்

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, நேற்று (12) மீண்டும் சந்தித்துள்ளனர்.

கொழும்பு-03 கொள்ளுப்பிட்டியிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பேச்சுவார்த்தையில் பங்கெடுக்க ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரும் அங்கு, பேசப்பட்ட விடயங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் கருத்துகளை வெளியிடுவதற்கு மறுத்துவிட்டனர்.

சொத்து விவரங்களை அறிவிக்காத

வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வேட்பாளர்களில், இதுவரை தமது சொத்து விவரங்களை அறிவிக்காத வேட்பாளர்களின் பெயர்களை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தலில் களமிறங்கிய வேட்பாளர்கள், வேட்பு மனுத் தாக்கல் செய்து, முதல் மூன்று மாதங்களுக்குத் தமது சொத்து விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவியேற்பதற்கு முன்னர் தமது சொத்து விவரங்கள் அடங்கிய அறிக்கைகளை, தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், வேட்பு மனுத்தாக்கல் செய்து, தற்போது சுமார் ஐந்து மாதங்கள் நிறைவடைந்துள்ளதாக, பெப்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஏழாயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்தவில்லையென, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதற்கமைய, சொத்து விவரங்களை அறிவிக்காதவர்களின் பெயர்ப் பட்டியலைக் கோரி, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்குப் பதில் கிடைத்தவுடன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட யுவதி

காதலனுடன் மீட்பு

எஸ். நிதர்ஷன், எஸ். ராஜ்

யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்குப் பகுதியில் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட யுவதி, மல்லாகத்தில் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் நால்வர் கொண்ட குழுவொன்று, 20 வயது யுவதியைக் கடத்திச் சென்றதாக, யுவதியின் பெற்றோர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதையடுத்து, கோப்பாய் பொலிஸார், மல்லாகம் பகுதியில் வைத்து நேற்றையதினம் (12) மாலை யுவதியையும் அவரைக் கூட்டிச்சென்ற இளைஞனையும் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், யுவதி, மேற்படி இளைஞனை நீண்ட நாள்களாக காதலித்து வந்ததாகவும் பெற்றோர், யுவதிக்கு திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தமையால், இளைஞன், யுவதியை அழைத்துச் சென்றுள்ளார்.

தாம் வெள்ளை வானில் செல்லவில்லை என்றும் மோட்டார் சைக்கிளில் சென்றே யுவதியை அழைத்துச் சென்றதாகவும் பொலிஸ் விசாரணையில் இளைஞன் தெரிவித்துள்ளார்.

சிநேகபூர்வ சந்திப்பு...

தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குழு அங்கத்தவர்களும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பட்லேவை, கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில், நேற்று (12) சிநேகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின்போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஸ்ணன் உபதலைவர்களான அ. அரவிந்தகுமார், வேலுகுமார், உதயகுமார், முன்னணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர், பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் ஜெகப், அரசியல் துறை பொறுப்பாளர் கவுன்சலர் பானு பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தேர்பவனி...

கொழும்பு-02, கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியம் சுவாமி கோவிலின் வருடாந்த தேர்பவனி, நேற்று (12) காலை நடைபெற்றது.

(படப்பிடிப்பு -பிரதீப்பத்திரண)

மலேசியாவில் மீண்டும் வேலை வாய்ப்பு

கொவிட் 19 தொற்றின் பின்னர், உலகில் உள்ள பல்வேறு நாடுகளில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை தொழிலில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு விசா வழங்க, மலேசியா நடவடிக்கை எடுத்துள்ளதென வெளியிட்டு, வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர், மலேசிய அரசாங்கத்தால் விசா வழங்க, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மலேசியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஆசிர்வாதம்..

கண்டி, மல்வத்த மகா விகாரைக்கு, நேற்று (12) சென்ற ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு, மல்வத்த மகாநாயக்க சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல, அநுநாயக்க தேரர்களான சங்கைக்குரிய நியங்ககொட விஜித்தசிறி, சங்கைக்குரிய திம்பல்கும்புரே விமலதம்ம, லேக்ககாதிகாரி சங்கைக்குரிய பஹமுனே சிறிசுமங்கல தேரர் உள்ளிட்ட காரக்க சங்க சபையின் மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வாதம் வழங்கினர். அமைச்சரவை நியமிக்கப்பட்டு, மூன்று நிக்காயக்களினதும் மகாநாயக்க தேரர்களை, அன்றைய தினமே அரச தலைவர்கள் சந்தித்தமையானது, இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாகும்.

கடமைகளை உடனடியாக சகலரும் பொறுப்பேற்பர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் முன்னிலையில், நேற்று (12) பதவிப்பிரமாணம் செய்துகொண்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட இணைப்புக்குழுத் தலைவர்கள் தங்களுடைய கடமைகளை உடனடியாகப் பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான, தினேஷ் குணவர்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனக பண்டார தென்னகோன், பவித்ரா வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் பத்திரண, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் தங்களுடைய கடமைகளை இன்று (13) பொறுப்பேற்கவுள்ளனர்.